விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 30 புதன்கிழமை (13.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

## முள்ளிவாய்க்கால் மருத்துவமனை மீது நேற்று மீண்டும் எறிகணைத் தாக்குதல்



### 49 பேர் பலி; 86 பேர் படுகாயம்

(லண்டன்)

முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள தற்காலிக மருத்துவமனை மீது மீண்டும் நேற்றுக் காலை நடத்திய அகோர எறிகணைத் தாக்குதல்களில் நோயாளர்கள் உட்பட 49 பேர் உயிரிழந்ததுடன் 86 பேர் காயமடைந்துள்ளனர் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

மக்கள் பாதுகாப்பு வலயமான முள்ளிவாய்க்காலில் தற்காலிகமாக இயங்கி வந்த முல்லைத்தீவு பொது மருத்துவமனை மீது நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் எறிகணைத் தாக்குதல்கள் அகோரமாக நடத்தப்பட்டது.

இதில் காயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்கள், நோயாளர்கள், பணியாளர்கள், உதவியாளர்கள், 5 சிறுவர்கள் உட்பட 49 பேர் கொல்லப்பட்டுள் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

# வன்னியில் கடந்த 3 மாதங்களில் 10 ஆயிரம் பொதுமக்கள் பலி!

## தமிழ்க் கூட்டமைப்பு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

வன்னியில் கடந்த 3 மாதகாலப் பகுதியில் மட்டும் சுமார் 10 ஆயிரம் பொதுமக்கள் படையினர் மேற்கொண்ட கனரக ஆயுதங்களின் தாக்குதல்களில் பலியாகியுள்ளனர். சுமார் 20 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் நிலைவரம் தொடர்பில் பாதுகாப்பு சபையில் விவாதிக்க வேண்டும்

### பிரித்தானியா, பிரான்ஸ் வலியுறுத்தல்

(நியூயோர்க்)

வன்னிப் பகுதியில் தற்போதைய நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட வேண்டுமென பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கையின் வட பகுதியில் கடந்த வார இறுதியில் 400 பேர் கொல்லப்பட்ட நிலையில் இலங்கை விவகாரம் நிச்சயம் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட வேண்டுமெனவும் இதனை ஏனைய உறுப்பு நாடுகள் நிராகரிப்பதை ஏற்றுக் கொள்ள *(12ஆம் பக்கம் பார்க்க)*

## சர்வதேசத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்க அரசு தயார்


### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் தோற்றுவிக்கப்படும் எந்தச் சவாலுக்கும் முகம் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது என தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது, தோல்வியின் விளிம்பில் உள்ள புலிகளுக்கு தம்மைக் காப்பாற்றிக் கொள்ள உள்ள ஒரே வழி *(12 ஆம் பக்கம் பார்க்க)*



## இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் பலியானவர் கொக்குவில் மேற்கு கேணியடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தங்கராஜா ரதீபன் (வயது 31) என அடையாளம் காணப்பட்டுள்ளார். *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## உணவுப் பொருள் தட்டுப்பாட்டால் பட்டினிக் கொடுமையில் மக்கள்

### மருத்துவர் வரதராஜா தகவல்

(லண்டன்)

உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவிற்கு பட்டினிக் கொடுமையில் போர் பிரதேசத்திலுள்ள மக்கள் அல்லலுறுவதாக அங்குள்ள மருத்துவர் வரதராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையில், இங்கு உணவில்லை, நீர்வசதியில்லை, பாதுகாப்பான இருப்பிடம் இல்லை *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## புலிகளின் தாக்குதல் திறனை 48 மணி நேரத்துக்குள் மாற்ற முடியும்

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இராணுவத்தினரால் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினுள் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இயலுமையை வரும் 48 மணித்தியாலத்துக்குள் நிறுத்திவிட முடியும் என பாதுகாப்பு படையினர் எதிர் பார்ப்பதாக பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் உயர் மட்ட அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் பாதுகாப்பு வலய பிரதேசத்தினுள் இன்னும் 48 மணித்தியாலத்தில் பாரிய மாற்றம் ஒன்றினை காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர் தாக்குதல் இயலுமையை *(12ஆம் பக்கம் பார்க்க)*

## பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களுக்கு விமானம் மூலம் நிவாரணப் பொருட்கள்

### விநியோகிக்குமாறு புலிகள் கோரிக்கை

(வவுனியா)

இராஜதந்திர வழிமுறைகளுக்கு அப்பால் சென்று போரற்ற பாதுகாப்பு வலய பகுதியில் உள்ள மக்களுக்கு விமானம் மூலம் நிவாரணப் பொருட்களைப் போடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு உலகின் மனிதாபிமான சமூகத்தை நாம் கேட்டுக் கொள்ளும் அதேவேளையில் அரசின் நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளில் இடம் பெயர்ந்துள்ள தமிழர்களுக்காக *(12 ஆம் பக்கம் பார்க்க)*

எமது ஸ்ருடியோவில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப்படங்களை படம்பிடித்து உடனுக்குடன் பெற்றுக் கொள்ள 80/= மட்டுமே

4R அளவிலான பிரதியாக்கம் 10/= மட்டுமே (Fugi Paper)

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரிக்கு தெரிவானோரின் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரங்கள் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனால் வெளியிடப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர் வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பதிவு செய்வதற்கான உரிய ஆவணங்களுடனும் விடுதியில் தங்குவதற்கான ஆயத்தங்களுடனும் பெற்றோருடன் உரிய நேரத்துக்கு முன்பாக கல்லூரிக்கு வருகை தருமாறும் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதத்தையும் உரிய படிவங்களையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் நாளை முதல் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு;

**சங்கீதம்**

கே.கஜந்தினி (காரைநகர்), எஸ்.யாழினி (சுன்னாகம்), எம். ஜனனி (ஏழாலை தெற்கு), எம். பிரதா (கரணவாய் வடக்கு), எஸ் . சிந்து (அளவெட்டி மேற்கு), எஸ். சிவரூபா (கரவெட்டி கிழக்கு),வை.சசிந்தா (கல்வயல்),யு.நாகதர்சினி (அராலி மத்தி),ஈ.ரூபினி (கரம்பன் கிழக்கு), ரி. நிசாந்தினி (மட்டுவில் கிழக்கு),

**நடனம்**

வி. கேமராதா (சித்தன்கேணி),எம்.எஸ்.ஜெயராணி (இணுவில் மேற்கு) , உசாநந் தினி (சாவல்கட்டு), ஏ. கனிதீபா (ஏழாலை தெற்கு), எம். வாசுகி (தாவடி), பி. சர்மிளா (மந்துவில் கிழக்கு), எஸ்.வி.ருசியந்தி (சுன்னாகம்),ஆர்.பிரியங்கா (மல்லாகம்), ரி.டிலுக்சி அன்சி (கோப்பாய் தெற்கு),வி.ஜசிந்தா (கொக்குவில்)

**நாடகமும் அரங்கியலும்**

பி.பகிர்தரன் (பொன்னாலை மேற்கு), எஸ். கிரிஷாநந்தினி (பண்டத்தரிப்பு),ரி.நிதர்சன் (சண்டிலிப்பாய்),பி.கிருசிகா (ஏழாலை மத்தி),பி.கஜமுகன் (பண்ணாகம்),ஆர்.விஜயதர்சினி (கரவெட்டி கிழக்கு),எஸ்.எட்வின் ராஜ்( குருநகர்),என்.தர்னி (வடலியடைப்பு),பி.ஜூட் கமில்ரன்(யாழ்ப்பாணம்),ஏ.டினேசன் (மானிப்பாய்)

**கணிதம் (ஆங்கிலமொழி)**

எஸ்.ராதை (உடுவில் கிழக்கு),ரி.சரணியா (வல்வெட்டித் துறை), வை.சஜீவன் (கொடிகாமம்),எஸ்.சாந்தி (வல்வெட்டித் துறை), ரி.பிரியா(மீசாலை மேற்கு) கே.ஜீவிதா (கந்தர்மடம்), எஸ். தினேஷ் (உசன்), என்.யாழினி (சுன்னாகம் கிழக்கு),

**ஆரம்பக்கல்வி**

வை.கர்சினி (கொடிகாமம்),எஸ்.ஜீவிதா (வண்ணார் பண்ணை மேற்கு),எஸ்.பாலரமணன்(மானிப்பாய் வடக்கு), பி.சுபித்திரா (பொன் னாலைமேற்கு),என்.விஜயரட்ணம் (புலோலி மேற்கு), பி. ரகிந்தன் (வேலணை கிழக்கு), பி. கெமினி (கந்தரோடை மேற்கு), ஏ. கஜனி (சாவ கச்சேரி),பி.மயூரன்(சாவல்கட்டு), எஸ். நிலானி (மீசாலைமேற்கு),ஆர். நிலக்ஷனா (உரும்பிராய் வடக்கு), ரி.ஞானகிரி(உடுவில்மேற்கு), பி.சுகந்தி (பொலி கண்டி), என்.சசிகரன்( தெல்லிப்பழை கிழக்கு),எஸ்.ரூபினி (புலோலி மத்தி), பி. அனுஷிகா (திருநெல்வேலி)

**விசேட கல்வி**

எஸ். துசாந்தி (திருநெல்வேலி), ஜெ. நீரயா (நல்லூர் வடக்கு), எஸ் .சிவசங்கர் (நீர்வேலி தெற்கு), ஆர். ஜெயமதன் (அரியாலை), எஸ்.சுதர்ஜன் (கரவெட்டிகிழக்கு),எஸ்.விஜயநிதி (உடுவில் தெற்கு),எம். தனேஸ்வரன்( உரும்பிராய் கிழக்கு),எஸ்.வினோதரன் (உரும்பிராய் கிழக்கு), எஸ். பாலரமணன் ( மானிப்பாய் வடக்கு),பி.சுபித்திரன் (பொன்னாலை மேற்கு), பி.ரஜிந்தன் (வேலணை கிழக்கு), என்.அனுஜா (சுழிபுரம்வடக்கு), ஆர். நிலக்ஷனா (உரும்பிராய் வடக்கு), வி. உமா (அல்வாய் கிழக்கு),எஸ்.சிவராமலிங்கம் (வதிரி),

**விஞ்ஞானம் (ஆங்கில மொழி)**

ரி.மணிவண்ணன் (உரும்பிராய் தெற்கு), பி.கம்சவாகினி (கந்தர் மடம்),பி.துவாரகா(கோண்டாவில் கிழக்கு), எம். சந்துரு( உரும்பி ராய் மேற்கு),கே. கிருஷ்ணசாந்தினி (யாழ்ப் பாணம்), எஸ்.கோபிநாத் (மானிப்பாய் வட க்கு), எஸ்.சங்கீதா (புலோலி மேற்கு),கே.சோபனா (யாழ்ப்பாணம்),வி.நதியா (புலோலி மேற்கு),ஐ.கார்த்திகா ( குடத் தனை), ஆர் .கௌசினி (ஊரெழு கிழக்கு), ஜெ.சேந் தன் (புத்தூர் மேற்கு), எம். பவிதா (கந்தரோடை)


# National Child Protection Authority - Vacant

**01)**

***Designation:***

**Assistant Psycho Social District Coordinator-Jaffna**

Qualification & Experience:

A degree in Sociology/Psychology from a recognized University.

Diploma in Counseling from a recognized institution and previous experience in Psychosocial work will be an added advantage qualification.

Preference will be given to those proficient in all the three languages Sinhala, English and Tamil or any two languages thereof and those possessing computer literacy.

Salary Scale: Rs.126,600-6x1560-8x2220-5x3480-17,120 p.a.

Age: Below 45 Years.

**02)**

***Designation:***

**Assistant District Coordinator-Jaffna**

Qualification & Experience:

A basic degree in Social Science/Psychology or Management of recognized University.

computer literacy is an added advantage.

Good Communication skill in English is prerequisite.

Should be able to demonstrate strong managerial skills.

Salary Scale: Rs.126,600-6x1560-8x2220-5x3480-17,120 p.a.

Age: Below 45 Years.

Those who are eligible to apply for the above posts are requested to prepare their own application and hand over to **Govt.Agent, District Child Development Committee, District Secretariat, Jaffna.** Before 16.05.2009 along with Copies of Educational certificate and Birth Certificate and other connected documents. Please note to include the contact telephone number in the application. Interview will be held on 18.05.2009 in this Secretariat to select the suitable cadidates for the posts. The time of interview will be notified over the telephone.

**K.Ganesh**

**Govt.Agent, Jaffna District.**

(C-2467)


# யாழ்.வணிகர் கழகத்தில் இன்று அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன் புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகள் வழங்குவது தொடர்பான அவசர பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வணிகர் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அவசர கூட்டத்திற்கு வர்த்தகத்துறை சார்ந்த அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ச)

# ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வன்னி தாக்குதல் தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்த சங்கரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நேற்று காலை 7.45 மணியளவில் முள்ளி வாய்க்கால் அரச வைத்தியசாலையில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததன் காரணமாக 26 நோயாளிகள் உடன் ஸ்தலத்திலும் சில நிமிடங்களின் பின் மேலும் 10 பேர் இறந்ததோடு 100 பேருக்கும் மேல் படுகாயமுற்றுள்ளார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் தங்களின் கவனத்துக்கு கொண்டுவருகிறேன்.

பீதியுடன் வாழும் மக்களை நோக்கி ஏவப்படும் எறிகணை தாக்குதலை தாங்கள் தலையிட்டு உடன் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேறு சம்பவங்களிலும் படுகாயமுற்ற ஏனையோருடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் 2 நாட்களுக்கு மேலாக இதுவரை எதுவித சிகிச்சையும் பெறாமல் இருப்பதனால் உடனடியாக வைத்திய குழுவினை தயவுசெய்து அனுப்பி வைக்கவும் என்றுள்ளது. (எ)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி தற்காலிக நிறுத்தம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிக்கு உதவிப் பொருட்களை வழங்கவும் அங்கிருந்து பொதுமக்களை வெளியேற்றவும் தாம் எடுத்த முயற்சியை அப்பகுதியில் நடைபெறும் கடும் மோதல்கள் காரணமாக தற்காலிகமாக கைவிடுவதாக செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

உதவிப் பணியாளர்களுடன் சென்ற கப்பல் முல்லைத்தீவு கடற் பகுதியில் நீண்ட நேரம் காத்திருந்து விட்டு திருகோணமலைத் துறை முகத்திற்கே மீண்டும் சென்று விட்டதாக செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

(ச-14)

# மட்டு. தேசிய கல்வியியற்கல்லூரிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூ ரிக்கு 2009 ஆம் கல்வியாண்டுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து சமூக விஞ்ஞானம், சங்கீதம், நடனம், ஆகிய பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய பயிற்சிநெறிகள் எதிர் வரும் 27ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆரம் பிக்கப்படவுள்ளதாகவும் இவர்களுக்கான கடிதம் அனுப்பிவைக் கப்படவுள்ளதாகவும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்டோரின் விபரம் வருமாறு;

**சமூக விஞ்ஞானம்**

எ.சோபனா (சுன்னாகம்), எம்.அமிர்தா (மானிப்பாய்), ரி.கோகுல்ராம் (கந்தர்மடம்), ரி.தாரணி (பருத்தித்துறை), ரி. கலைச்செல்வி (ஆனைக்கோட்டை), என்.விஜயரட்ணம் (பருத்தித்துறை), பி.கேமினி (யாழ்ப்பாணம்),

**நடனம்**

பி.சுஜாதா (உரும்பிராய்), எஸ்.றோமியா (கொக்குவில்), பி.யாழினி (மானிப்பாய்),

**சங்கீதம்**

ரி. ஜெமிலா (கொக்குவில்). எஸ்.பிரமிலா (கோண்டாவில்), எஸ்.சர்மினி (தாவடி), எ.ஆரணி (இணு வில்), ஆர்.அனித்தா (சுங்கானை).


# பாராட்டி வாழ்த்துகிறோம்!



தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால்,பொதுசன நூலகங்களின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மாகாண மட்டத்தில் சிறந்த நூலகராக யாழ். பொதுசன நூலகத்தின் பிரதம நூலகரான திரு.சபாரட்ணம் தனபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான விருது இன்று காலை 9 மணிக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மண்டபத்தில்,உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஜனக பண்டார தென்னக்கோன் அவர்களால் வழங்கப்படுவதில் மனம் மகிழ்ந்து சிறந்த நூலகருக்கான விருதினைப் பெறும் எமது யாழ். பொதுசன நூலக பிரதம நூலகரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்!

நூலக ஊழியர் நலன்புரிச்சங்கம்
யாழ்.பொதுசன நூலகம்

13.05.2009 (2730)

# தீவகம் தெற்கு பிரதேச சபை-வேலணை

## கேள்வி அறிவித்தல்

**கீழ்க்காணும் சாதனங்களை வழங்குவதற்கான கூறுவிலை எம்மால் கோரப்படுகின்றன.**

**புதிய இழுவை வண்டியும் மூடிய இழுவைப் பெட்டியும் (Brand New Tractor with Covered Trailer)**

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் செயலாளர், பிரதேசசபை வேலணை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமும்,அதன் பிரதியொன்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். சாதனங்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து கையேற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் 20.05.2009ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

22.05.2009ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அந்த நேரம் கேள்விக்காரரோ அல்லது அவர் சார்பான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்
செயலாளர்
தீவகம் தெற்கு பிரதேசசபை
வேலணை

தீவகம் தெற்கு பிரதேசசபை
வேலணை
12.05.2009 (C-2465)

# இன்று ஒரு தகவல்

## பரீட்சை எழுதுவது எப்படி?

இந்தக்கால பையன் எதற்கும் பயப்படமாட்டான். ஆனால் ஒரு விடயத்துக்குப் பயப்படுவான். எதற்குத் தெரியுமா?

பரீட்சைக்குத்தான். பரீட்சை நெருங்க நெருங்க சிலருக்கு காய்ச்சலே வந்துவிடும்.

படிக்காமலே இருந்தால்தான் பரீட்சை பயமுறுத்தும். ஆரம்பத்திலிருந்தே படித்துக்கொண்டு வந்தால் கடைசி நேரத்தில் பரீட்சையைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இருக் காது.

அதுசரி... நல்லவிதமாக பரீட்சை எழுதுவது எப்படி? அதற்கு பெரியவர்களெல்லாம் சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். படிக்கும் பிள்ளைகள் இதைக் காதில் வாங்கி வைத்திருப்பது நல்லது.

10 மணிக்கு பரீட்சை ஆரம்பம் என்றால் 8 மணிக்கே எல்லா பாடங்களையும் ஒரு தடவை புரட்டிப் பார்ப்பது நல்லது.

பரீட்சை எழுத பாடசாலைக்கு செல்கிறீர்கள். அப்பொழுது உங்களுக்கு யார் மீது ரொம்பப் பிரியமோ அல்லது யாருக்கு உங்கள் மீது ரொம்பப் பிரியமோ அவர்களிடம் சொல்லிவிட்டுப் புறப்படுங்கள். அரை மணித்தியாலத்துக்கு முன்பே அங்கு போய்விடுங்கள். கடைசி நேரத்தில் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

பரீட்சை எழுத முன்னர் வெளியே நின்று கொண்டிருக்கும் மற்றைய மாணவர்களிடம் பாடத்தைப் பற்றி சந்தேகம் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். சில சமயம் அது குழப்பமாகிவிடும்.

பத்து நிமிடங்களுக்கு முன்பே பரீட்சை மண்டபத்துக்குள் நுழையுங்கள். விடைத்தாள் கொடுத்தவுடன் அதைக் கவனமாக பூர்த்தி செய்யுங்கள். உங்கள் சுட்டெண்ணை உரிய இடத்தில் எழுதுங்கள்.

நோக்குநரின் கையொப்பம் விடைத்தாளில் இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

வினாத்தாள் கொடுத்தவுடன் நிதானமாக அதிலுள்ள குறிப்புகளைப் படியுங்கள்.

எத்தனை கேள்விக்குப் பதிலளிக்க சொல்லியிருக்கிறார்கள்... எத்தனை கேள்விக்குப் பதில் தெரியும் என்று முடிவு செய்யுங்கள். தெரியாத கேள்வியைப் பற்றி மனதை அலட்டிக் கொள்ளவேண்டாம்.

எந்தக் கேள்விக்கு பதில் நன்றாக தெரியுமோ அந்தக் கேள்விக்கு முதலில் பதில் எழுதுங்கள்.

முதல் இரண்டு மூன்று பக்கம் கொஞ்சம் நிதானமாக அழகாக எழுதுங்கள். அதன் பின்னர் நேரத்துக்கு தகுந்தாற் போல் பார்த்துக் கொள்ளுங்கள்.

எழுதி முடிந்ததும் அந்தக் கேள்வியில் சரி அடையாளம் இட்டுக் கொள்ளுங்கள். இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி அந்த நேரத்தில் பதில் எழுத வேண்டும்.

கேள்விக்குத் தகுந்த பதில் போதும். உங்களுக்கு தெரிந்ததையெல்லாம் வளவளவென்று எழுதிக் கொண்டிருக்கக் கூடாது.

பதில் எழுதும் போது தொடர்ச்சியாக எழுதிக் கொண்டே போகாமல் இடைவெளி விட்டு எழுத வேண்டும். ஒரே கேள்விக்கு இரண்டு இடத்தில் பதில் எழுதக்கூடாது. திருத்துபவர்கள் ஏமாந்து போய் புள்ளிகள் போடுவார்கள் என்று எண்ணி சிலர் இப்படி எழுதுவதுண்டு. அப்படியெல்லாம் ஏமாறமாட்டார்கள்.

முதலில் தெரிந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் எழுதிவிடுங்கள். பின்னர் தெரியாத கேள்வியாக இருந்தாலும் உங்களுக்கு தெரிந்த அளவுக்குப் பதில் எழுதுங்கள். அதை விட்டுவிட வேண்டாம்.

எல்லாம் எழுதி முடிந்ததும் கடைசியாக ஒரு தரம் எல்லாம் சரியாக உள்ளதா என்று பாருங்கள். கமா, செமிக்கோலன் விடுபட்டிருந்தால் அவற்றைப் போடலாம்.

வினா இலக்கம், பக்க இலக்கம் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள். மணியடித்ததும் நிதானமாக விடைத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்து விடுங்கள்.

வீட்டுக்குப் போனவுடன் அடுத்த பரீட்சைக்கான புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு உட்காராதீர்கள்.

ஒரு மணி நேரமாவது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அதன் பின் அடுத்த பரீட்சைக்குப் படிக்கலாம்.

பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற இரண்டு மாணவர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஒருவன் சொன்னான். வீட்டில் படிக்கும் போது எனக்கு ஏதாவது பாடத்தில் சந்தேகம் வந்துவிட்டால் உடனே அப்பாவைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். அதனால் தான் அதிக புள்ளிகள் பெற முடிந்தது என்றான்.

அதற்கு இவன், " எனக்கு பாடத்தில் சந்தேகம் வந்தால் உடனே எங்கள் அப்பாவிடம் கேட்க மாட்டேன். அதனால் தான் அதிக புள்ளிகள் பெற முடிந்தது" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**17 வயதுப் பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ். சோபிகா – கொடிகாமம் திருநாவுக்கரசு, எம். விதுஷா – மீசாலை வீரசிங்கம், யூ. துஷ்யந்தினி – நவாலி மகா வித்தி.

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர். யக்சனா – அருணோதயாக் கல்லூரி, கே. வண்ணமதி – கைதடி நாவற்குழி G.T.M.S. எஸ். கஜனா – மகாஜனாக் கல்லூரி.

**400 மீற்றர் ஓட்டம்**

ஏ. சுகன்யா –இளவாலை கன்னியர்மடம், கே. சரண்யா – வல்லை சிவகுரு வித்தி, எஸ். சோபிகா – கொடிகாமம் திருநாவுக்கரசு.

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ். கஜனி – மூளாய் சைவப் பிரகாசம், ஆர். சித்தாரா – அத்தியார் இந்துக்கல்லூரி, பி. கலைரூபி – தியாகராஜா மத்திய மகாவித்தி.

**1500 மீற்றர் ஓட்டம்**

சி. கஜனி –மூளாய் சைவப்பிரகாசம், ஆர். சித்தாரா – அத்தியார் இந்துக்கல்லூரி, கே. ஜனுயா – பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

எஸ். மேரி பெனினா – திருக்குடும்ப கன்னியர் மடம், ஆர். கார்த்திகா – சங்கானை சிவப்பிரகாசம், ரி. தர்மினி – நவாலி மகா வித்தியாலயம்.

**உயரம் பாய்தல்**

எஸ். கிஷாந்தினி – றிபேக்கல்லூரி, கே. அபிர்னா – கம்பர்மலை –G.T.M.S.,ஜெ. மயூரா – கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**100 மீற்றர் சட்டவேலி**

இ. மேரிசூசையம்மா – இளவாலை கன்னியர்மடம், எஸ். பத்மசத்தியா – அருணோதயாக் கல்லூரி, ரி. மதுரா – சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**400 மீற்றர் சட்டவேலி**

எஸ். மேரி பெனினா – திருக்குடும்ப கன்னியர் மடம், சி. தர்ஜினி – யூனியன் கல்லூரி, ஜெ. துஷாநந்தினி – திருக்குடும்ப கன்னியர் மடம்.

**குண்டெறிதல்**

எஸ். ஜனார்த்தனி – இராமநாதன் கல்லூரி, எஸ். கீர்த்திகா – யூனியன் கல்லூரி, கே. திவ்யா – ஆவரங்கால் நடராஜர் இராமலிங்கம்

**தட்டெறிதல்**

கே. சகானா – மகாஜனாக் கல்லூரி, என். நிமாலினி – மீசாலை வீரசிங்கம் – எஸ். ஜானகி – மெதடிஸ் (G.H.S)

**ஈட்டி எறிதல்**

எஸ். ஜானகி – மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, எஸ். டென்சிகா – வட்டு மத்திய கல்லூரி, கே. சாதுர்யா – அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி.

**முப்பாய்ச்சல்**

ஆர். யக்சனா – அருணோதயாக் கல்லூரி, எஸ். ஜெயரஞ்சனி – விக்ரோறியாக்கல்லூரி, ஆர். ஸ்ரெபிகிறாவ் – திருக்குடும்ப கன்னியர் மடம்.

**கோலூன்றிப் பாய்தல்**

ஆர். யக்சனா – அருணோதயாக் கல்லூரி.

**4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

அருணோதயாக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மெதடிஸ் (G.H.S)

**4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

அருணோதயாக் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், ஆவரங்கால் நடராஜர் இராமலிங்கம்.

**19 வயது ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

ஆர். எடின் – யாழ் மத்திய கல்லூரி, எஸ். அனிஸ்ரன் – மல்லாகம் மகா வித்தி, சி. ஜக்சன் – சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர். எட்வேட் எடின் – யாழ் மத்திய கல்லூரி, எஸ். அனிஸ்ரன் – மல்லாகம் மகா வித்தி, எம். றெட் மெண்ட் கிறிசன் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**400 மீற்றர் ஓட்டம்**

எஸ். சுசிதர் – கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, சி. ஜக்ஷன் – சென் பற்றிக்ஸ் கல்லூரி, கே. ஜெயக்குமார் – விக்ரோறியாக் கல்லூரி.

**800 மீற்றர் ஓட்டம்**

ஆர். கோபிகன் – யாழ் மத்திய கல்லூரி, ஜெ. பற்றிக் எறிக் பிறற்கப் – சென் பற்றிக் கல்லூரி, எஸ். சுசீதன் – கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

**1500 மீற்றர் ஓட்டம்**

ஆர். சதீஸன் – யாழ். இந்துக் கல்லூரி, எம். கலாவினோதன் – மீசாலை வீரசிங்கம், எஸ். பிரசாந் – சிதம்பராக் கல்லூரி.

**5000 மீற்றர் ஓட்டம்**

ஆர். சதீஸன் – யாழ். இந்து கல்லூரி, எஸ். திலக்ஷன் – சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, ரி. ரவிராஜ் – ஹாட்லிக் கல்லூரி.

**100 மீற்றர் சட்டவேலி**

ஜெ. பிரதாப் – சென் பற்றிக் கல்லூரி, கே. ஜெயக்குமார் – விக்ரோறியாக் கல்லூரி, இ. மயூரன் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**400 மீற்றர் சட்டவேலி**

எஸ். அனிஸ்ரன் – மல்லாகம் மகா வித்தி, ஜெ. பிரதாப் – சென். பற்றிக்ஸ் கல்லூரி, கே. ஜெயக்குமார் – விக்ரோறியாக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

ஏ. அன்ரன் நிதர்சன் – பற்றிக்ஸ் கல்லூரி, எம். கஜன்ராஜ் – யாழ். மத்திய கல்லூரி, எல். லக்ஷ்கன் – வீணாகாமம் மகாவித்தி.

**உயரம் பாய்தல்**

பி. பாலசங்கர் – யாழ் மத்திய கல்லூரி, எம். கிருஷ்ணா – மகாஜனாக் கல்லூரி, எஸ். தர்சன் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**முப்பாய்ச்சல்**

எஸ். லக்ஷன் – மகஜனாக் கல்லூரி, ஏ. அன்ரன் நிதர்ஷன் – சென் பற்றிக் கல்லூரி, ஆர். தபேந்திரன் – சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**குண்டெறிதல்**

வி. ஹரிகரன் – ஹாட்லிக் கல்லூரி, ஜி. பிரகதேஷ் – யாழ். இந்துக் கல்லூரி, ஜெ. ரதீசன் – யாழ். மத்திய கல்லூரி.

**தட்டெறிதல்**

வி. கரிஹரன் – ஹாட்லிக் கல்லூரி, டபிள்யூ. பிறடிக்டிலான் – மகாஜனாக் கல்லூரி, ஏ. பிரசன்னா – சென் ஜோன்ஸ் கல்லூரி.

**ஈட்டிஎறிதல்**

எஸ். செந்தூரன் – இணுவில் இந்துக் கல்லூரி, ரி. மனோராஜ் – ஹாட்லிக் கல்லூரி, ஏ. பிரசன்னா – சென் ஜோன்ஸ் கல்லூரி.

(தொடரும்)

# இராசி பலன்

13.05.2009
சித்திரை 30, புதன்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 3.45 மணிவரை
மூலம் முற்பகல் 8.52 மணிவரை
இராகுகாலம் 11.54-1.24 மணிவரை
சுபநேரம் 4.24-5.54 மணிவரை
சங்கட சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | தந்தை வழி உறவு, கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, பயணம். |
| இடபம் | அபகீர்த்தி, காரியதடங்கல், மனச்சோர்வு, போசன சுகம். |
| மிதுனம் | குடும்ப மகிழ்ச்சி, தொழில் நன்மை, காரிய அனுகூலம், தனவருவாய். |
| கடகம் | பகைவர் நேசம், முயற்சி கைகூடும், உற்சாகம், போசன சுகம். |
| சிங்கம் | புத்திரரால் கவலை, அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| கன்னி | மனச்சஞ்சலம், தொழில் விருத்தி, முயற்சி பலிதம், போசன சுகம். |
| துலாம் | கூட்டு முயற்சி, உறவினர் உதவி, தனலாபம், வாக்கு மேன்மை. |
| விருச்சிகம் | கௌரவக்குறைவு, வேலைச்சுமை, காரிய தாமதம், தனவிரயம். |
| தனுசு | சிந்தனை மிகுதி, வாக்கு மேன்மை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | காரிய அலைச்சல், ஆரோக்கியக் குறைவு, தனவிரயம், மனப்பதட்டம். |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி, தனலாபம், உடல் நலம். |
| மீனம் | அதிக பிரயாசை, பாராட்டு, போசன சுகம், தன்னம்பிக்கை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 |
| தக்காளி | 180 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 20 | 50 | 40 |
| கரட் | 40 | 50 | 50 |
| பூசணி | 20 | 40 | 20-40 |
| புடோல் | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 35-40 | 40 | 40 |
| பெரிய வெங்காயம் | -- | -- | -- |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 100 | 120 | 200 |
| பீற்றூட் | 20 | 40 | 30 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 10 |
| தேசிக்காய் | 110 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 20-25 |

## வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் நூலக வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் நூலக வாரத்தை முன்னிட்டு இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு பொதுநூலக விரிவாக்கல் சேவை ஆரம்பம், நடமாடும் சேவை, நூல்கள் கண்காட்சி ஆகியன சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கருத்துரையை சங்கானை பொது நூலக நூலகர் திருமதி பா. செல்வராணி வழங்கவுள்ளார்.

அத்துடன் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அராலி வாசகர் வட்டம் பொது நூலக தலைவர் சி.க. சிற்றம்பலம் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதுடன் கருத்துரையை வட்டுக்கோட்டை பொது நூலக நூலகர் பா. விஜயகுமார் வழங்கவுள்ளார். (ஓ-4)

## நூலக விழிப்புணர்வு கருத்தரங்கும் கண்காட்சியும்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் நூலக வாரத்தை முன்னிட்டு நூலக விழிப்புணர்வு கருத்தரங்கும் நூல் கண்காட்சியும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு புலோலி பொது நூலக மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-4-35)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் தகுதி பெற்று மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டு இதுவரை நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் இன்று புதன்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடவுள்ளதால் அனைவரையும் காலை 8 மணிக்கு யாழ். பெருமாள் கோயில் முன்பாக ஒன்று கூடுமாறு பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக் கொள்கிறது. (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பசார் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை யாழ். அடைக்கலம் அன்னை தேவாலயம் 5 ஆம் குறுக்குத்தெருவிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை பிரதான வீதி, பேதுருப்பிள்ளை வெதுப்பகம் முன்பாகவும், வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை J/74 மடம் வீதி மாட்டீன் வீதியிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணி வரை கோவில் வீதி அருள் ஆச்சிரமத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-4)

# ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் யாழ் வருகையால் பெருமகிழ்வடைகிறோம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிசன் உப தலைவர் தவத்திரு சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் யாழ் விஜயம் மேற்கொள்வதையிட்டு பெரு மகிழ்வடைவதாகவும், சுவாமிகளின் திருப்பாதம் படுவதால் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ ராம கிருஷ்ண மிசனின் பணிகள் பரவ வேண்டும் என்றும், பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார்.

இச்சேவாச்சிரமம் 31.12.1969 இல் அன்னையின் ஜன்ம தினத்தில் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அத்துடன் உலகெலாம் ஆல்போல் விழுது களைப் பரப்பியுள்ள ராம கிருஷ்ண மிஷன், யாழ்ப்பாணத்திலும் 1926 இன் பின் அன்பளிப்புச் செய்யப்பட்ட, உரும்பிராயில் அமைந்துள்ள நிலத்தில் தனது கிளையை அமைக்க உள்ளதை அறிந்து மகிழ்வடைவதுடன் அன்னையின் பெருங்கருணையை எண்ணி பூரிப்படைகிறேன். (ஓ)

# கலாபூஷணம் விருதிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டுக்குரிய கலாபூசணம் விருதிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விருதிற்காக சிற்பம், ஓவியம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நடனம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப் புறவியல், இலக்கியம், சினிமா, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் சிறப்புடன் சேவையாற்றி வரும் 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மேற்படி தகைமையுள்ள கலைஞர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி உரிய ஆவணங்களை இணைத்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலி. மேற்கு பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# மாகாண மட்டத்தில் சிறந்த நூலகராக யாழ் பொதுசன நூலக பிரதம நூலகர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டத்தில் சிறந்த நூலகராக் யாழ். பொதுசன நூலக பிரதம நூலகர் ச. தனபாலசிங்கம் விருதினை பெற்றுள்ளார்.

தேசிய நூலக வாரத்தினை முன்னிட்டு தேசிய நூலக ஆவ்வணவாக்கல் சேவைகள் சபையால் பொது சன நூலகங்களின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சிறந்த பொதுசன நூலகராக மாகாண மட்டத்தில் முதல் விருதிற்குரியவராக சபாரட்ணம் தனபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான விருதினை இன்று காலை 9. மணிக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மண்டபத்தில் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் வழங்கவுள்ளார். (ஓ-51)




## சாவகச்சேரி நகரசபையின் நூலக வார செயற்பாடுகள்

(கல்வயல்)

சாவகச்சேரி நகரசபை பொது கிளை நூலகங்களின் நூலக அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம் நகரசபை செயலாளரும் நூலக அபிவிருத்தி குழு தலைவருமான திருமதி குணமணிதேவி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் நூலக வாரத்தை முன்னிட்டு பொது கிளை நூலகங்களில் தனிதனி கண்காட்சி வைப்பது, நடுமாடும் நூலக சேவை நடத்துவது, நூலகத்திற்கு புதிதாக நூல்களை கொள்வனவு செய்வது வாசகர் மாணவர்களிடையே கட்டுரை, பொது அறிவுப் போட்டி நட்த்துவது, பொது மக்களிடம் இந்து நூல்களை அன்பளிப்பாக பெறுவது, மக்களை சிறந்த நூல்களை அன்பளிப்பு செய்யுமாறு கோருவது ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ஓ-4-31)

## மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2007 ஆம் ஆண்டு நடந்த கற்பித்தலில் தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சையில் நூன சித்தி பெற்றவர்களுக்கான மீள்பரீட்சை மே மாதம் 18 ஆம் திகதி யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (ஓ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி மேற்கு கலாசாரப்பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஆனி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருப்பதால் கலாசாரப் பேரவை உறுப்பினர்களாக உள்ளோர் தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்வதுடன் புதிதாகச் சேர விரும்புவோரும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு இதற்கான விண்ணப்ப படிவத்தைப் பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பு தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி மேற்படி கூட்டம் சிறப்புற நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலி மேற்கு பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் "பூமேல் மயல் போய்" என்னும் விடயம் பற்றி சுவாமி சித்ரூபானந்தா ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## பால் வழங்கும் திட்டம்

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பிறந்து 24 மாதம் முடிவடைந்ததும் 60 மாதத்திற்குட்பட்டதுமான வறிய பிள்ளைகளுக்கு ஒரு கப் பால் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அவ்வப் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-30)

## பிரம்மோற்சவம்

ஆனைக்கோட்டை திருவருள்மிகு கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய வருடாந்த பிரம்மோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை சப்பறமும், 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு தீர்த்தோற்சவமும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஓ-4)

## புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட மட்ட தரம் 5 மாணவர்களுக்கான இவ்வருட முதலாவது மாதிரிப் பரீட்சை நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களை பரீட்சை தினத்தன்று கோட்டக் கல்வி அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## ஜே/49 கிராம அலுவலர் அலுவலகம் இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/49 கிராம அலுவலரின் அலுவலகம் புனித மரியாள் ஒழுங்கையில் (சென் மேரிஸ் லேன்) உள்ள வீடொன்றுக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது.

இவ்வலுவலகம் ஐந்து வருடங்களுக்கு மேலாக மேற்கு வீதி பொலிஸ் தலைமை அலுவலகத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டாக் காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இரவு நேரங்களில் தங்கியிருக்கும் நோயாளிகளை விரட்டித்துரத்திச் செல்லும் நாய்களால் விடுதியை விட்டு நோயாளிகள் வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சுமார் 40 க்கு மேற்பட்ட (குட்டிகள் உட்பட) கட்டாக்காலி நாய்கள் நடமாடி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (ஓ-72)




யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தரம் 10 மாணவர்களுக்கான ஆங்கில முகாம் நிகழ்வில் யாழ். கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராஜா உரையாற்றுவதையும் கல்லூரி அதிபர் மற்றும் வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# ஈழத்து இலக்கியப் பரப்பில் சமஸ்கிருத ஆக்கங்கள்

01

### அறிமுகம்

உலகிலே காணப்படுகின்ற மொழிக ளிலே பழைமையானதாகவும் வளமுள்ளதா கவும் விளங்குகின்ற மொழிகளில் சமஸ்கி ருதமும் ஒன்றாகும். மொழி நூலாரின் கருத்துப்படி, இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மொழி தமிழ் இலக்கிய மரபிலே வடமொழி என அழைக்கப்படினும் சமஸ்கிருதம் என்னும் சொல்லும் பயன்படுத்தப்படுகின்றது. சம் நன்கு கிருதம் செய்யப்பட்டது என்னும் கருத்தினையுடையது சமஸ்கிருதம். பாணினி என்னும் இலக்கண ஆசிரியரால் இலக்கணம் வகுக்கப்பட்டு நன்கு ஒழுங்கு படுத்தப்பட்டதன் பின்பே சமஸ்கிருதம் என அழைக்கப்பபட்டது. ஒவ்வொரு மெய்வர்க்கங்களிலும் நான்கு விதமான ஒலி எழுத்துக்களைக் கொண்டிருப்பதும் பெயர், வினைவடிவங்களில் இருமை வடிவம் தனியாகப்பேணப் படுவதும் இம்மொழிக் குரிய சிறப்பம்சமாகும். கிரந்த வரிவடிவம், நாக ரவரிவடிவம் என இரு வரிவடிவ எழுத்துக்களைக் கொண்டு இம் மொழி விளங்குகின்றது.

இன்று உலகின் பொது மொழியாக ஆங்கிலம் விளங்குவது போல் ஒரு காலத்தில் சமஸ்கிருதம் இந்தியப் பொது மொழியாக விளங்கியது குறிப்பிடத்தக்கது. பலவிதமான அறிவியல் அம்சங்களோடு விளங்குகின்ற வட மொழியாகிய சமஸ்கிருதம் தென்மொழியாகிய தமிழோடு நீண்டகாலம் தொடர்பு கொண்டு விளங்குகின்றது. காலத்தால் முந்தைய இருக்கு வேதம் முதலாக ஏனைய வேதங்களும் உபநிடதங்கள், இதிகாச புராணங்கள், காவியங்கள், தோத்திர இலக்கியங்கள், சமயக்கிரியை நூல்கள், தத்துவம், கலைகள் எனப் பல்வேறு நூல்கள் வகையாலும் தொகையாலும் இம் மொழியில் பரந்து காணப்படுகின்றது.

### ஈழத்தில் சமஸ்கிருதம்

இலங்கையில் புராதன காலந்தொட்டே சமஸ்கிருத அறிவு நிலவி வந்துள்ளது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் காணப் படும் பிராமிக் கல்வெட்டுக்கள் அக் காலத்தில் வட மொழியினுடைய சிறப்பான பயன்பாடுகள் நிலவி வந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. கி.பி 7 ஆம் நூற்றாண்டில் குச்சவெளி, திரியாய் போன்ற இடங்களில் காணப்பட்ட கல்வெட்டுக்களும் இலங்கையில் சோழராட்சிக் காலத்தில் இருந்த உள் ளூராட்சிச் சாசனமாகிய கந்தளாய்ச் சாசனமும் பிராமணர்கள் வாழ்ந்த இடத்தையும் இராஜ இராஜ சோழனுடைய மெய்க்கீர்த்திகள் அவ் அரசர்கள் வடமொழி மயப்படுத்தப்பட்ட பெயர்களைக் கொண்டிருந்தமையும் எடுத்துக்காட்டுகின்றன.

கி.பி 13-17 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களும் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளார்கள். கி.பி 17 ஆம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த சமஸ்கிருத அறிஞர்கள் பற்றியும் அவர்கள் கிரந்தலிபியில் நூல்கள் எழுதிப் பதிப்பித்தமை பற்றியும் போலதிரி தானிதே என்ற போர்த்துக்கேய அறிஞர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டுத் தமிழ் மொழி சமஸ்கிருத மொழியோடு இணைந்தே வளர்க்கப்பட்டு வந்துள்ளது. பொதுவாக 17-18 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப் பாணத்தில் வடமொழி அறிவு இல்லாத தமிழறிவுடையோர் கருத்துக்களை வித்துவான்கள் அங்கீகரிப்பது குறைவு. அத்துடன் சமஸ்கிருத அறிவானது சைவசமயம், தமிழ் ஆகியவற்றை விளங்கிக்கொள்வதற்கு மட்டுமன்றி தமிழிலக்கியங்களிலுள்ள சந்தேக விபரீதங்களைப் போக்குவதற்கும் அதன் பழைமை வாய்ந்த சிறப்பான இலக்கியங்களைக் கற்று உணர்வதற்கும் அவசியம் எனக் கருதப்பட்டது.

இதன் காரணமாத் தமிழ் மொழிக் கல்வியுடன் இணைந்ததாகச் சமஸ்கிருத மொழிக் கல்வியும் அக்காலம் போதிக்கப்பட்டு வந்தது, வட மொழிக் கல்வி கற்றவர்களில் சிலர் இம்மொழியை மேலும் நன்கு கற்றுப் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்கள். சிலர் தமது சமய நூல் அறிவிற்கும் இலக்கிய ஆர்வத்திற்கும் ஏற்ற வகையில் வடமொழியில் புலமை பெற்று விளங்கினார்கள். சைவப் பெரியார்களும் ஆகமங்களையும் வேதங்களையும் கற்று சைவசமயத்துவ மரபுகளை நன்கு வளர்த்து வந்தனர்.

ஒப்பீட்டளவில் நோக்கும்போது கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப் பாணத்தில் சம்ஸ்கிருத மொழியானது ஒரு சிறப்பான தன்மையை அடைந்திருந்தது எனக் கருதலாம். அக் காலப் பகுதியில் தாய் நாட்டுடனான தொடர்பும் தாய் நாட்டிலிருந்து சம்ஸ் கிருத மொழி அறிஞர்கள் காலந்தோறும் இங்கு வந்து கல்வி, சமயம், பண்பாடு ஆகியவற்றிற்கு ஆற்றிய பங்களிப்புக்களையும் இங்கிருந்து அறிஞர் தாய் நாட்டிற்குச் சென்று கல்வி கற்றமையும் சமயம் , மொழி,தத்துவம் ஆகியவற்றிற்கு ஆற்றிய பங்களிப் பினையும் நோக்கும்போது ஓர் இணைந்த பண்பாட்டுத் தன்மையானது கல்வி மரபு சிறந்து விளங்குவதற்கு ஏற்ற காரணியாக அமைந்தது.

### தென்னிலங்கையில் சம்ஸ்கிருத மரபு

ஆரியரது குடியேற்றம் முதலாக பௌத்த மதம் இலங்கைக்கு வரும் வரையான காலப் பகுதியில் சம்ஸ்கிருதமொழி இலங்கையில் உபயோகிக்கப்பட்டதற்கான சான்றாதாரங்கள் இல்லை. எனினும் இங்கு குடியேறிய மக்கள் இந்தியாவில் பொதுவாக வழக்கிலிருந்த சமயம் , மொழி , பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் தம்முடன் கொண்டு வந்திருப்பர் எனக் கருதலாம்.

மிகப்பழைய பாளிநூல்களின் உரைநடை, சம்ஸ்கிருதச் சொற்தொடர்கள் அவற்றில் காணப்படும் பாரதம் இராமாயணம் ஆகிய வற்றின் கருத்துக்கள் என்பவற்றை நோக்கும் போது சம்ஸ்கிருதமொழி முற்பட்ட கால மரபில் இங்கு வழக்கிலிருந்தமொழிகளுடன் ஓரிடம் பெற்று நிலவியிருந்ததை உணரலாம்.

கி.பி.3ஆம் நூற்றாண்டின் இறுதியில் அபயகிரி ஜேதவனவிகாரையில் இருந்த பிக்குகள் சம்ஸ்கிருத மொழிக் கல்வியில் புகழ் பெற்று விளங்கினர். கி.பி.4ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் உபதிஸ்ஸ என்ற பிக்குவால் சம்ஸ்கிருதமொழியில் இயற்றப்பட்ட விமோக்ஷமார்க்க என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகும் .அநுராதபுர ஆட்சிக்காலத்தில் மகாயான பிரிவைச் சேர்ந்த துறவிகளின் மடங்களிலே சம்ஸ்கிருத மொழி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இக்காலப் பகுதியில் சமய மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் சம்ஸ் கிருதமொழி விளங்கியமை குறிப்பிடத்தக்கது. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் மிகிந்தலையிலுள்ள இந்திகட்டு சாய அநுராத புரத்திலுள்ள விஜயராம செப்பேடுகளில் பஞ்ச விம்சதிச ஹஸ் ரிகா, பிரபஞ்சபாரமிதா போன்ற பாளி நூல்களிலுள்ள வடமொழிச் சுலோகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சிகி ரியாச் சுவரெ முத்துக்களிலும் சில வட மொழிச் சொற்கள் காணப் படுகின்றன.

கி.பி.3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசனான புத்த தாச மன்னனால் 2600 பாடல்களைக் கொண்ட சார்த்த சங்கிரகம் என்ற நூல் வடமொழியில் எழுதப்பட்டது. இதனுடைய முதல் செய்யுள் மாத்திரம் பாளிமொழியில் காணப்படுகின்றது. அடுத்து கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமார தாசர் என்னும் அரசினால் 20 சர்க்கங்களிலமைந்த ஜானகீஹரணம் என்ற மஹா காவியம் இயற்றப் பட்டது.

இவருடைய இயற் பெயர் குமாரதாதுசேன என பரக்கும் பாசிரித நூல் குறிப்பிடுகின்றது. ஆசிரியர் பரணவிதான இவர் மாணவன் மன் காலத் தில் வாழ்ந்த சிங்களக் கவிஞர் எனக் குறிப் பிடுகிறார்.

இராமாயணக் கதையைக் கருவாகக் கொண்ட இவரது காவியம் உவமை, உருவகம், சொல்லாட்சி, சிறந்த கவிதை அமைப் போடு கூடிய மஹாகாவிய லக்ஷணங்கள் பொருந்திய ஒரு காவியமாகும்.

ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்ம
BA.(Hons)M.Phil
சிரேஷ்ட விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

அக்கால சம்ஸ்கிருதமொழி நிலைக்கு ஈழத்தில் எழுந்த இம் மஹா காவியம் ஓர் சிறப்பான சான்றாகும் இவர் சிறிகணானந்த காவியம் என்ற ஒரு புத்த காவியத்தையும் இயற்றியுள்ளார்.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

58



திரு மார்சல் கன்ச் கட்டைப் பிரமச்சாரி , பஸ் ஓட்டுநர், அவருக்கு இளம் சமுதாயத்தினர் போதை மருந்துக்கு அடிமையாகி வருவது பற்றி கவலை. அவர் அர்க்கன் சாஸில் வாழ்ந்தவர். அவருடைய தந்தை பல வர்த்தகங்களில் இறங்கி கோட்டை விட்டார் . பலர் அவரை ஏமாற்றியும் விட்டனர். அதன் பின் சூதாட்டம் , குடி என்று தொடங்கி வீட்டையும் குடும்பத்தையும் இழந்தார். ஈற்றில் குழி ஒன்றில் வீழ்ந்து மூச்சற்றுக் கிடந்த சடலத்தை எடுத்தனர்.

அது தான் தலைமைத்துவம் நாளுக்கு நாள் ஒபாமாவுக்கு கற்றுத்தந்த பாடங்கள். அவர் தேடித்திரிந்த சுயநலம் என்பது முகம் கொடுக்கவிருக்கும் பிரச்சி னைகளுக் கும் அப்பால் விரிந்து கிடந்தது. சிறு சிறு பேச்சுக்களுக்கும், மேலெழுந்த மான சுய சரிதைகளுக்கும், கிடைத்த கருத்துக் களுக்கும், கீழ் மக்கள் தங்களைப்பற்றியவிளக் கங்களைச் சுமந்து நின் றனர். ஆச்சரியமும் பயங் கரமும் நிறைந்த கதைகள் அவர்களை இன்னும் பீடித் திருந் தன. அல்லது முன் னேற்றப் பாதை யில் உந் தித்தள்ளின.

இந்த உணர்வு தான் ஒபாமா அவர்களுடன் தன்னைப்பற்றி சொல்லவும் அவரை தனிமைப்படுத்திய ஒன்றை உதறித்தள்ளவும் செய்தது. ஒபாமா வளர்ந்த சூழல்களை அவர்களறிந்ததும் அவர் ஏன் தான் சிக்காகோவில் குளிருக்குள் வந்து வருந்த வேண்டி வந்தது என்று ஆச்சரியப்பட்டனர்.

காலம் போகப்போக அவரும் அவர்களும் இனம் தெரியாத பாசத்தால் பிணைக்கப் பட்டனர். ஒபாமாவுக்கு அவர் தேடிய இலக்கு, இடம் ஆகி யவை கிடைக்கப் பெற்ற உணர்வு ஏற்பட்டது.ஆழமாகத் தோண் டினால் அங்கே சமூகம் ஒன்று கிடைக்கப் பெறும் என்று மார்ட்டி கூறியது உண்மை தான். ஆனால் அவர்களோடு இணைந்து செயற்படும் போதெல்லாம் ஒரு புதிய உல கம் தோன்றியது.

அதாவது அவர்கள் கேட்டால் எதையும் தானமாகத் தரத் தயாராகினர். இது தான் பணியின் இலக்கியம்; மார்ட்டி இந்தக் கருத்தைத் தவறாக எண்ணினார்.

ரூபி ஒபாமாவின் திட்டங்களைச் செயற் படுத்த தன்னை முற்றிலும் அர்ப்பணித்து கடுமையாக உழைத் தாள். தனது அயலவர்களைக் கூட்டி ஒரு வலைப் பின்னல் போல் ஆட்களைச் சேர்த்தாள். வாக்காளரின் பட்டியலை உருவாக்கினாள். மாணவர்களின் பெற் றோர்களைக் கண்டு அவர்களின் ஆதரவைப் பெற்றாள். எந்த நிறுவனமும் கனவு காணும் உழைப்பாளி அவள். நிறைந்த, பயன் படுத்தாத ஆற்றல்கள் அவளிடம் இருந்தன. உற்சாகம்,நேரிய பார்வை, எதையும் கற்று விட வேண்டும் என்ற துடிப்பு , பொதுவாழ் வில் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆசை என்று பல குணாதிசயங்களைக் கொண்டி ருந்தாள்.

ஒரு நாள் ரூபியைத் தன் அலுவலகத் திற்கு வந்துபோகும் படி தொலைபேசியில் அழைத்துக்கூறினார் ஒபாமா. அவள் வந்த போது அவளுடைய கண்மணி வழக்கத் திற்கு மாறாக நீலமாகவிருந்தது. அவள் அப்போது தான் கொன்ராக்ற் லென்ஸ் (Con tact Lens) போட்டதாகக் கூறினாள். அழகாக இருக்கிறதா என்று ஒபாமாவிடம் கேட்ட போது அவர், 'முன்னையது அவளின் தோலுடன் ஒத்துப் போய் அழகாக இருந்ததே' என்று அவர் வெட் டிப்பதில் கூறியதும் துணுக் குற்றாள். கறுப்பர்களிடம் இருந்த தன்னம் பிக்கை அற்ற போக்கை இது காட் டியது.

இந் தோனேசியாவில் ஒபாமா சிறு வனாக தாயுடன் கல்விபயிலும் போது அவரை அமெரிக்க ஸ்தானிகராலயத்திற்கு தாய் கூட்டிச் சென்றால் அங்குள்ள நூலகத்தில் அவரை விட்டு விட்டு தன் பணியைத் தொடர்வது வழக்கம்.

அப்போது அங்கிருந்த (Life ) லைப் என்ற சஞ்சிகையைப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்த ஒபாமாவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அமெரிக்காவில் ஒரு கறுப்பர் வெண்மை யாக்கும் கிறீம் (Bleaching Cream) பற்றிய விளம்பரத்தை நம்பி ,வாங்கிப் பாவித்ததும் அது அவரின் தோலை எரித் துப் புண்ணாக்கி விட்டது. அந்த கறுப்பர் தான் வெள் ளையராக மாற வேண்டும் என்ற ஆசை விபரீதமாக முடிந்தது.

ஜம்பொன்


ஒபாமா கறுப்பர்களுக்கு ஏற்பட்டி ருந்த நிற உணர்வு பற்றி நன்கு அறிந்திருந்தார். கல் லூரிகளில் கறுப்பு மாணவர்களிடையே நிறத் தாழ்வுணர்வும் அதன் அடிப்படையிலான அரசியலும் நன்கு பழக்கப் பட்டவை. ஒபாமா சிக்காகோவில் காலடி வைத்த நேரத்தில் இருந்து சுய கௌரவம் என்ற சொற்கூட்டம் எல் லோருடைய உதட்டில் இருந் தும் வெளிப் பட்டது. கறுப்பர்கள் தங்களின் துன்பத்தைச் சுட்டிக்காட்ட வசதியான சொல்லாட்சியாகப் பயன்பட்டது.

(தொடரும்)

# பிரான்ஸ் வைத்திய நிபுணர்களால் செட்டிகுளம் வைத்தியசாலையில் 100 பேருக்கு சத்திரசிகிச்சை

## சிகிச்சை பெற்றவர்கள் எரிகாயங்களுக்குள்ளாகி இருந்ததாக டாக்டர்கள் தெரிவிப்பு





(கொழும்பு)

செட்டிகுளத்தில் அமைந்துள்ள பிரான்ஸ் கள வைத்தியசாலையில் நூற்றுக்கணக்கான காயமடைந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரு வாரங்களில் பிரான்ஸைச் சேர்ந்த 72 வைத்திய நிபுணர்களும் டாக்டர்களும் தாதிமார்களும் இணைந்து கடும் காயங்களுக்குள்ளான 700 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளதுடன் அவர்களில் 100 பேருக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்ததாக ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஏ.எவ்.பி. வெளியிட்டுள்ள செய்தியில்,

அரசாங்கம் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறுகின்றது. ஆனால் தமிழ் பொதுமக்கள் செலுத்தியிருக்கும் அதிக விலையை எரிகாயங்களுக்குள்ளாகியும் நினைவிழந்த நிலையிலும் காணப்படுவோர் வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர் என பிரான்ஸ் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து வந்தவர்களுள் தாங்கள் சிகிச்சை அளித்த பலர் எரிகாயங்களுக்கு உள்ளானவர்களாக இருந்தாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ் எரிகாயங்கள் பொஸ்பேற்றால் எரியுண்டமைக்கான சாத்தியம் உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். சர்வதேச பிரகடனத்திற்கமைய பொது மக்கள் உள்ள பகுதிகளில் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும். ஏ.எவ்.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கசப்பான இன மோதலானது அதன் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில் சாதாரண கிராம வாசிகள் ஆண்கள் ,பெண்கள், இளைஞர்கள், முதியோர் கள் சுடப்பட்டும் குண்டு,ஷெல் வீச்சுக்கு இலக்காகி எரிகாயங்களுக்குள்ளாகி இருப்பதையும் அவர்களின் காயங்கள் வெளிப்படுத்துகின்றன.

மேலும் தமிழர் ஒருவரின் இருதயத்தின் அருகில் துப்பாக்கிச் சன்னம் ஒன்று துளைத்துள்ளதை எக்ஸ்ரே படங்கள் காட்டின. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானவர்களில் இவரும் ஒருவர். அவர் இது பற்றி கூறுகையில் 6 மாதங்களுக்கு முன் தனக்கு சூடு விழுந்ததாகத் தெரிவித்தார்.

இது குறித்து கருத்துவெளியிட்ட பிரான்ஸ் டாக்டர் மைக்கல் ஒசர் இதனைத் தம்மால் அகற்ற முடியாது எனவும் இதற்கென முழுமையான சிகிச்சை அவசியம் எனவும் கூறினார்.

டேனியல் சோஜொக்ஸ் என்ற பிரான்ஸ் சத்திரசிகிச்சை நிபுணர் கருத்துவெளியிடுகையில் ,

இடம்பெயர்ந்து தப்பி வந்த பொதுமக்களின் உடல்களில் இருந்த இயந்திர துப்பாக்கிகளின் சன்னங்கள் மற்றும் கூரிய சிதறல்களைக்கண்டு நான் பேரதிர்ச்சி அடைந்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாம் 10 நாட்களில் இவ்வாறான 30 சன்னங்களை அகற்றினோம். அவற்றில் 10 சன்னங்கள் சிறுவர்களின் தோள்பட்டையிலும் கால்களிலும் வயதான பெண் ஒருவரின் முழங்காலிலும் கூட இருந்தது என்று பிரான்ஸ் நிவாரணக்குழுவில் இடம்பெற்றிருந்த பிரேக்ட்டிக் வாவுடீன் என்பவர் கூறினார்.

மற்றுமொரு 31 வயதான சுசந்திரன் திரேசம்மா தனது மார்பு ,தோள்களில் காணப்படும் காயங்களுக்கு சிகிச்சை பெற்றுள்ளார்.

அவர் கூறுகையில் இருவாரங்களுக்கு முன்னர் இரசாயன குண்டுகளுக்கு இலக்காகி காயமடைந்ததாக தெரிவித்துள்ளார். இதே வகையான எரிகாயங்களை ப்லரிடம் தாங்கள் பார்த்ததாக பிரான்ஸ் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

சிலர் வெள்ளையான கைகளுடன் காணப்படுகின்றனர். இது பொஸ்பரசால் எரியுண்ட சாத்தியத்தை காட்டுவதாக டாக்டர்கள் தெரிவிக்கின்றீனர்.

இதேவேளை பொதுமக்கள் உள்ள பகுதியில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்துவதற்கு சர்வதேச சட்டங்கள் தடைவிதிக்கின் றன.

இந்நிலையில் அரசாங்கமும் தமிழ் புலிகளும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக பரஸ்பரம் குற்றம் சாட்டுகின்றனர். அதேவேளை இக்குற்றச்சாட்டுகளை இரு தரப்பினரும் மறுக்கின்றனர். இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரம் செட்டிக்குளத்தில் உள்ள பிரான்ஸ் கள வைத்திய சாலைக்கு ஏ.எவ்.பி. செய்தியாளர்களை அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இந்தியாவில் இருந்து ரயில் என்ஜின்கள் இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

ரயில் சேவையின் மேம்பாட்டுக்காக மேலும் புதிய ரயில் என்ஜின்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி இந்த வருட இறுதிக்குள் 20 பவர் செற் ரயில்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

இவ்வாறான முதலாவது ரயில் தொகுதி 4 மாதங்களுக்குள் இலங்கை வந்தடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மலசலகூட வசதி சொகுசு ஆசன வசதி என்பன இவற்றில் உள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இவை இரண்டு கட்டங்களாக கப்பல் மூலம் கொழும்பை வந்தடையவுள்ளன.

இது தொடர்பாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் தூர இடங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படக்கூடிய பவர்வெற் ரயில்களையே இம்முறை தருவிக்கவுள்ள தாகவும் அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது. (ஓ-6)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீனா நிதி உதவி

(கொழும்பு)

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்க ளுக்கு வந்து நிவாரணக் கிராமங் களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவும் வகையில் சீன அரசாங்கம் ஒரு மில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற் கொள்ள சர்வதேச சமூகத்திடம் இல ங்கை அரசாங்கம் உதவி கோரியிருந்தமைக்கு ஏற்பவே அவசர நிவாரண உதவித் தொகையாக சீனா இதனை வழங்கியுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் இதற்கான காசோலையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவிடம் நேற்று முன்தினம் அவரது அமைச்சில் வைத்து கையளித்தார். (ஓ-6)

## மெனிக்பாம் பகுதியில் தீயணைப்புப்படை தயார் நிலையில்

(கொழும்பு)

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்து நிவாரணக்கிராமங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்க அரசாங்கம் விசேட நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்திற்கு ஏற்ப செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் இரண்டு தீயணைப்பு படை வாகனங்களும் பணியாளர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

தென்பகுதியில் இருந்து இரு தீயணைக்கும் படைப்பிரிவும் பாவனைக்குரிய அம்புலன்ஸ் வண்டிகளும் பணியாளர்களும் 24 மணி நேரதயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ளனர். இங்கு தற்போது உஷ்ணமான காலநிலை நிலவுகின்றது. ஆபத்துக்களைத் தவிர்க்கும் வகையிலேயே தீயணைக்கும் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# தொண்டு நிறுவனங்கள் எவையும் இலங்கை அரசுக்கு நிதியுதவி அளிக்க வேண்டாம்

## நாடு கடத்தப்பட்ட 'சனல் 4' ஊடகவியலாளர் கோரிக்கை

இலங்கை அரசாங்கம், வெளிநாட்டு நிதிகளைப் பெறுவதில் குறியாக இருப்பதாக இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்ட பிரித்தானிய 'சனல் 4 'ஊடகவியலாளர் நிக் பெட்டன் வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் ஏராளமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இலங்கையில் ஊடகச் சுதந்திரம் என்பது முற்றாக இல்லை. தம்மை நாடு கடத்தியமை கூட,முறையாக செய்திருக்க வேண்டும். ஆனால் தம்மை இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத் தபாய ராஜபக்ஷ அழைத்து அச்சுறுத்தியதாக நிக்பெட்டன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் எந்த செய்தியினையும் விருப்பப்படி வெளியிட முடியும். ஆனால் அது இலங்கையில் வைத்து இல்லை. வெளிநாடுகளில் வைத்து என தம்மை அவர் அச்சுறுத்தியதாக வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் முகாம்களை புனரமைக்கவும், பராமரிக்கவும் அதிகரித்த அளவு வெளிநாட்டு நிதிகளை எதிர்பார்த்து இருக்கிறது. அவர்கள் எந்த அளவு நிதிகளை திரட்ட முடியுமோ, அந்த அளவுக்கு திரட்ட முற்படுகின்றனர். ஆனால் உண்மையில் இந்த நிதிகள் அங்குள்ள பொது மக்களுக்கு பயன்படுத்தப்படப் போவதில்லை.

தேசிய பாதுகாப்பு எனக் கூறி , இராணுவ முன்னெடுப்புகளுக்காகவே இந்த நிதிகளை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனாலேயே இடம்பெயர்ந்த நிலையில் இன்னும் பல வருடங்களாக தமிழ் மக்கள் குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள்.

எனவே தொண்டு நிறுவனங்கள் எதுவும் இலங்கை அரசாங்கத்திற்கு நிதியுதவி செய்யக் கூடாது என பிரித்தானிய ஊடகவியலாளரான வோல்ஸ் கோரியுள்ளார். (ஓ-5)





முல்லைத்தீவில் இருந்து வந்தவர்களில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டு பள்ளேகல நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் முன்னிலையில் புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தன் உரையாற்றுவதையும் அங்குள்ள இளைஞர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சனல் 4 ஊடகவியலாளர் தொடர்பில் அரசின் முடிவு நாட்டுக்கு அபகீர்த்தி

## ஐ.தே.க. எம்.பி. ஜயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் சனல் 4 ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளா அல்லது நிரபராதிகளா என்ற தீர்வு காணப்பட வேண்டியிருந்தது. ஆனால், அரசாங்கம் இப்பிரச்சினையில் தன்னிச்சையாக செயற்பட்டமை நாட்டுக்கு அபகீர்த் தியை ஏற்படுத்தியுள்ளது என்று ஐ.தே கட்சி எம். பி டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி மேலும் கூறுகையில் ,

எமது நாட்டிற்கு துரோகத்தனமான செய்திகளை அவர்கள் வெளிப்படுத்தினார்களா என்பது தொடர்பில் பிரிட்டிஷ் சனல் 4 ஊடகவியலாளர்கள் மூவர் மீதும் அரசாங்கம் விசாரணைகளை நடத்தியிருக்க வேண்டும்.

இவ்வாறான தொரு விசாரணையில் குற்றவாளிகளென இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களை நாடு கடத்தியிருக்கலாம் அப்போது அது நியாயமான செயற்பாடாக அமைந்திருக்கும்.

ஆனால் எதுவிதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படாது தன்னிச்சையான அரசாங்கத்தின் முடிவினால் அந்த செய்தியாளர்களது செய்தி உ ண்மையானதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் நிலை உருவாகுவதோடு இலங்கையில் ஊடக அடக்குமுறை உள்ளதென்பதற்கு சாட்சியாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கைக்கு அபகீர்த்தியை எற்படுத்தும் என்றார். (ஓ-6)

# புலிகள் தப்பிச்செல்லாதவாறு முல்லைக்கடற்பரப்பில் நான்கு பாதுகாப்பு வலைகள் அமைக்கப்பட்டுள்ளன

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மக்கள் பாதுகாப்பு வலயத் துக்குள் சிக்குண்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் உட்பட முக்கியஸ்தர்கள் தப்பிச் செல்லாதிருக்கும் வகையில் கடற்பரப்பின் பாதுகாப்பு மேலும் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கடற்படையின் பதில் பேச்சாளர் கமாண்டர் மகேஸ் கருணாரட்ன தெரிவித்தார். இதற்காக முல்லைத்தீவு கடற் பரப்பில் விஷேட பாதுகாப்பு நடைமுறை யொன்றும் கையாளப்பட்டு வருகின்ற நிலையில் நான்கு பாதுகாப்பு வலைகளும் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

புலிகள் இயக்கம் முக்கியஸ்தர்கள் கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முயற்சித்துவருவதாகவும் அந்நாட்டு புலனாய்வுப்பிரிவினர் தகவல் தெரிவித்துள்ளனர். இதனால் கேரளா மற்றும் ஆந்திரா போன்ற கடற்பரப்புகளின் பாதுகாப்பு அந் நாட்டு கடற் படையினரால் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இருப்பினும் முல்லைத்தீவு கடற்பரப்பின் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதால் விடுதலைப்புலிகள் எக்காரணம் கொண்டும் இந்தியாவுக்கு தப்பிச்செல்லமுடியாது . இந்த பாதுகாப்பு திட்டத்தின் பிரகாரம் முல்லைத்தீவு கடற்பரப்பில் நான்கு பாதுகாப்பு வலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் முதலாவது பாதுகாப்பு வலைமுல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்துக்கு மிக நெருங்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதன்பாதுகாப்பு விஷேட போர்ப் படகுகளின் மூலமாகவே அதிகரிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து சுமார் ஒரு கடல் மைல் தொலைவில் இரண்டாவது பாதுகாப்பு வலை கடற்படையின் அதிரடிப்படைப் பிரிவினராலும் இன்னும் சில கடல்மைல் தொலைவில் மூன்றாவது பாதுகாப்பு வலை டோரா ரக அதிவேகப் படகுப் பிரிவினாலும் மேலும் சில கடல்மைல் தொலைவில் இறுதியும் நான் காவதுமான பாதுகாப்பு வலை யும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு பாதுகாப்பு வலைகளையும் மீறி விடுதலைப்புலிகளால் இந்திய கடல் எல்லைக்குள் ஒரு போதும் நுழைய முடியாது .

இதனால் விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஊடுருவக்கூடும் என்று இந்தியா உள்ளிட்ட எந்தவொரு நாடும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. அதற்கேற்றவாறு கடற்படையினர் பாதுகாப்பு நடைமுறை களைக் கையாண்டு வருகின்றனர் என்றார். (ஓ-6)

# எஞ்சியுள்ள குறுகிய நிலப்பரப்பை விரைவில் அரச படையினர் கைப்பற்றுவர்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

எஞ்சியுள்ள குறுகிய நிலப்பரப்பை மிக விரைவில் அர சாங்கப் படையினர் கைப்பற்றி விடுவர். பொதுமக் களுக்கு எந்த ஆபத்துக்களும் இல்லாமலேயே இந்தப் பிரதேசம் கைப்பற்றப்படும் என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில், பொது மக்களின் பாதுகாப்புக் கருதி கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவது இல்லை என்ற தீர்மானத்தில் அரசாங் கம் உறுதியாக இருக்கின்றது. எந்த அழுத்தம் வந்தாலும் இந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாது என்றார்.

மேலும் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 910 பொதுமக்கள் வந்துள்ளனர். அவர்களில் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 234 பேர் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளனர். ஏனையோர் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலையில் உள்ளனர்.

காயமடைந்தவர்களை அழைத்து வரும் கப்பலிலேயே தற்போது பொருட்கள் அனுப்பப் படுகின்றன. இதில் அதிக பொருட்களை அனுப்ப முடியாது.


எனவே விரைவில் 500 மெற்றிக்தொன் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு அனுப்பத் தீர்மானித்துள்ளோம். ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடனேயே இதனைச் செய்ய முடியும். இது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம் என்றார். (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற வடமராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -01.05.2009


## நெல்லியடி மகாவித்தியாலயம்




8671




8672





8673




8674






சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் அனுசரணையுடன் பனை அபிவிருத்திச் சபையினால் கொட்டடி சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட பனங்கைப்பணிப்பொருட் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஹான்ஸ் பீற்றர் எற்றர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பயிற்றுவிப்பாளர் கிறிஸ்தோபர், வதனமலர் நிற்பதை முதலாவது படத்திலும், பயிற்சி பெற்ற யுவதிகள் மற்றும் சனசமூக நிலைய உறுப்பினர்கள் பிரதம விருந்தினருடன் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தெற்கில் வெசாக் கொண்டாட்டம்
# வடக்கில் எம் மக்கள் படுகொலை

## மனோ கணேசன் எம்.பி

(கொழும்பு)

பாதுகாப்பு வலயத்தில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட பெருந்தொகை மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஐ.நா. சபையும், சர்வதேச செய்தி ஊடகங்களும் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் எதுவுமே நடக்கவில்லையென்றோ அல்லது நாங்கள் காரணமல்லவென்றோ சிறு பிள்ளைத்தனமாக கருத்து தெரிவிப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். கொல்லப்படுவது எங்களது மக்கள் என்பதால் இதை நிறுத்துங்கள் என்று உலகத்தை கோருவதற்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு உரிமை இருக்கின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார். பாதுகாப்பு வலய உயிரிழப்புகள் தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

கடந்த வார இறுதியில் தெற்கிலே கௌதம புத்தபகவானின் பெயரால் புனித வெசாக் பண்டிகை கொண்டாடிய வேளையிலே வடக்கிலே பெருந்தொகையான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி எங்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. குழந்தைகள், பெண்கள் கொல்லப்பட்டுள்ளதை ஐ.நா. சபை ஊர்ஜிதம் செய்கின்றது. உலக செய்தி நிறுவனங்கள் உண்மைகளை அம்பலப்படுத்துகின்றன.

இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு பொறுப்புடன் நடக்க வேண்டிய அரசாங்கத்தின் போக்கு, சிறுபிள்ளைத்தனமாக இருக்கின்றது. ஐ.நா. சபையையும், உலக் நிறுவனங்களையும் உதவி அளிக்கும் படி அழைக்கும் அரசாங்கம், அந்நிறுவனங்கள் உண்மைகளை எடுத்துக் கூறும் போது ஆத்திரப்படுவது ஏன்? அரசாங்கத்திடம் மறைப்பதற்கு எதுவும் கிடையாது என்றால் எதற்காக செய்தியாளர்களை வெளியேற்ற வேண்டும்? ஐ.நா. பாதுகாப்பு சபையிலே இலங்கை தொடர்பான விவாதத்தை தவிர்ப்பதற்கு ஏன் பிரியத்தனம் செய்ய வேண்டும்?. அல்லது ஆப்கானிஸ்தானில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை சுட்டிக்காட்டி நமது நாட்டில் நடைபெறும் அப்பாவி மக்கள் படுகொலை பற்றி பேசப்படுவதை தவிர்க்க ஏன் முயற்சிக்க வேண்டும்? ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அப்பாவி மக்கள் படுகொலையாவதை நாங்கள் கடுமையாக கண்டிக்கின்றோம். ஆனால், அங்குநடைபெறும் சம்பவங்களை காரணம் காட்டி நமது நாட்டில் நமது மக்கள் கொல்லப்படுவதையோ அல்லது அதுபற்றி பேசப்படுவதையோ நாங்கள் தவிர்க்க முடியாது.

அரசாங்கம் இத்தகைய அப்பாவி மக்களின் மரணங்களுக்கு காரணம் புலிகளின் நடவடிக்கைதான் என்று கூறுகின்றது. புலிகள், அரசாங்கத்தை குற்றம் சுமத்துகின்றார்கள். ஆனால், உண்மைகளை நடுநிலைமையாக எடுத்துக்கூறுவதற்கு செய்தியாளர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கும் வடக்கே செல்வதற்கு அனுமதி கிடையாது. இதுதான் இன்றைய நடைமுறை. இந்த நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பு வலயத்திலே அப்பாவி குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் கொன்று குவிக்கப்படுவதற்கு இனிமேலும் இடமளிக்க முடியாது. (ஓ-6)

## டேவிட் மிலிபாண்ட் புலிகளை ஊக்குவிக்கிறார்

### இலங்கை அதிகாரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப்புலிகள் அப்பாவி பொதுமக்களை கொல்வதை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் கவனப்பிசகாக ஊக்குவிப்பதாக இலங்கை அரசாங்க மூத்த அதிகாரி ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயப் பகுதியில் நடத்தப்பட்ட கடுமையான எறிகணைத் தாக்குதலில் கிட்டத்தட்ட 400 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு, ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்ததாக அந்தப் பகுதியில் உள்ள மருத்துவர் ஒருவர் தெரிவித்திருந்தார்.


இந்த எறிகணைகள் அரசாங்க கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் இருந்து வந்தவை போன்று தென்படுகின்றன.

ஆனால், இந்த பாதிப்புக்கள் புலிகளால் ஏற்படுத்தப்பட்டவை என்றும், அவர்களை டேவிட் மிலிபாண்ட் அவர்கள் ஊக்குவிக்கிறார் என்றும், பிபிசிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், இலங்கை ஜனாதிபதியின் நிரந்தரச் செயலாளரான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். புலிகள் சரணடைய வேண்டுமா என்ற கேள்விக்கு நழுவலாக பதிலளிப்பதன் மூலம் அவர் புலிகளை ஊக்குவிக்கிறார் என்று ரஜீவ விஜேசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார். (ஓ-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பப்பாளி

Botanical Name - Carica Papaya
Family - Caricaceae
Engl -Papaya
Sing -Gas - labu



இது ஒரு சிறு மரம். இம்மரம் 6-7.5 மீ உயரம் வரை வளரக் கூடியது. பெரும்பாலும் தண்டு கிளைக்காமல் முடிவில் இலைகளை நெருக்கமாகக் கொண்டிருக்கும். அங்கை வடிவ மடல்களை உடைய தனியிலைகள் 90 செ.மீ நீண்ட காம்புகளை உடையவை. இதில் பல இரகங்கள் ஒருபால் பூக்களைக் (பெண் பூக்கள் தனிமரத்திலும், ஆண்பூக்கள் தனிமரத்திலும் உண்டாகும்) கொண்டிருக்கும். பெண்பால் பூக்கள் உண்டாகும் மரங்களில் தான் காய்கள் உண்டாகும். (மகரந்தச் சேர்க்கை, கருச் சேர்க்கைக்கு பின்பு) தற்போது சில இரகங்களில் ஆண், பெண்பால் பூக்கள் இரண்டுமே ஒரே மரத்தில் உள்ளன. கனிகள் தண்டின் மேல் முனையில், இலைகளின் அடியில் நெருக்கமாக அமைந்திருக்கும். விதைகள் பல கருமை சாம்பல் நிறமுடையவை. மலர்களும், கனிகளும் வருடம் முழுவதும் காணப்படும்.

### பரம்பலும், இனவிருத்தியும்

பப்பாளி மரம் எங்கும் பயிராகும். இதற்கு தண்ணீர் விட்டு வளர்க்க வேண்டிய தேவையில்லை. வளமான மண்ணில் செழித்து வளரும். விதைகள் மூலம் நாற்றுக்களை உண்டாக்கி 0.5மீ X 0.5மீ X0.5மீ அளவுள்ள குழிகளில் 2மீ X2மீ இடைவெளிகளில் கன்றுகளை நடவும். நாற்றுவிட்ட 5-6 மாதங்களில் பூக்கள் உண்டாகி 9-10 வது மாதங்களில் காய்கள் உண்டாகும்.

**100 கிராம் பப்பாளிக்காய் மற்றும் பழத்திலுள்ள சத்துக்கள்**

| சத்துக்கள் | காய்கள் | பழங்கள் |
|---|---|---|
| புரதம் (கி) | 0.7 | 0.6 |
| கொழுப்பு (கி) | 0.2 | 0.1 |
| நார்ப்பொருள் (கி) | 0.9 | 0.8 |
| காபோவைதரேற்று (கி) | 5.7 | 7.2 |
| கல்சியம் (மி.கி) | 28 | 17 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 40 | 13 |
| இரும்பு (மி.கி) | 0.9 | 0.5 |
| தயமின் (மி.கி) | 0.01 | 0.04 |
| ரைபோளினேவின் (மி.கி) | 0.01 | 0.25 |
| விற்றமின் 'C' (மி.கி) | 12 | 57 |
| மகனீசியம் (மி.கி) | - | 11 |
| கரோட்டின் (மை.கி) | - | 666 |

### மருத்துவப் பயன்கள்

◆ தினசரி ஒன்றிரண்டு துண்டு பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உடலில் நல்ல பலம் ஏற்படும். பழம் சாப்பிட்டு வரும் காலத்தில் இரவு படுக்கைக்குப் போகும் முன் ஒரு டம்ளர் அளவு காய்ச்சிய பசும் பாலை குடித்து வர வேண்டும். தொடர்ந்து 40 நாட்கள் இப்படிச் சாப்பிட்டால் உடலில் எந்த வகையான நோயும் தாக்காது. பப்பாளிப் பழத்தில் நுண்ணிய நோய்க் கிருமிகளை கொல்லும் சக்தி மிகுந்திருப்பதால் தொற்று நோய் பரவி வரும் காலத்தில் கூட இதனைப் பயன்படுத்தலாம். இறைச்சிவகைகளை உண்ணும் போது மதிய உணவிற்கு பின் இரண்டு துண்டு பப்பாளிப் பழத்தை உண்டால் அதில் காணப்படும் Papain எனும் இரசாயனப் பொருள் புரதச் சமிபாட்டை தூண்டி செரிப்பை இலகு வாக்கும்.

இறைச்சியை மென்மைப்படுத்தவும் இது பயன்படும். உதாரணமாக ஆட்டிறைச்சி சமைக்கும் போது ஓரிரு துண்டு பப்பாளிக்காயை அத்துடன் சேர்த்துக் காய்ச்சினால் இறைச்சி மிகவும் மென்மையாகி, சுவையாக இருக்கும். பப்பாளிப்பழம் சாப்பிட்ட பின் அதிக பசி எடுக்கும். இது பழத்திற்கு உள்ள சீரணத்தை மிகுதிப் படுத்தும் தன்மையை வெளிக் காட்டுகிறது. பப்பாளிப் பழம் ஈரலை பலப்படுத்தக் கூடியது. பப்பாளிப் பழத்துடன், சீனி, சிறிதளவு சிட்ரிக் கமிலம் சேர்த்து ஜாம் செய்தும் சாப்பிடலாம். இது உடல் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத பழமாகும். மூல நோயுடையவர்களும் தினமும் 100 கிராம் பப்பாளிப்பழத்தை உண்ணலாம். கர்ப்பிணித் தாய்மார்கள் முதல் 6 (ஆறு) மாதங்கள்வரை பப்பாளிப்பழம் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

◆ உடல் பருமன் குறைய - முற்றிய பப்பாளிக்காயை கொண்டுவந்து தோலைச் சீவி விட்டு, தேவையான அளவு துண்டுகளாக நறுக்கி சமைத்து வாரத்திற்கு இரண்டு முறை சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் குறையும்.

◆நீரிழிவு நோயாளிகள் பப்பாளிக் காயை தோலுடன் நன்கு கழுவிய பின்பு, தோலைச் சீவி அதிலிருந்து வடியும் பாலையும், சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய பப்பாளிக் காயையும் கப்பிப் பாலில் சமைத்து உண்ண இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறையும்.

◆பப்பாளி இலையை அம்மியில் வைத்து மைபோல அரைத்து உடலில் ஏற்படும் கட்டியின் மேல் கனமாகப் பற்றுப் போட்டு வந்தால் கட்டி பழுத்து உடையும்.

◆உடலில் எந்தப் பகுதியிலாவது வலி ஏற்பட்டால் பப்பாளி இலையை பொடியாக நறுக்கி, ஒரு சட்டியில் போட்டு, இரண்டு தேக்கரண்டியளவு வேப்பெண்ணெயை அதில் விட்டு நன்றாக வதக்கி, ஒரு துணியில் கொட்டி சூடாக இருக்கும் போதே வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்தால் வலி உடனே தணியும்.

◆ஆறாத புண்களுக்கு பப்பாளி இலையின் மேல் வெப்பெண்ணெயை தடவி தணலில் மேல் காண்பித்து துவழ வதக்கி புண்ணின் மேல் வைத்துக் கட்டி வந்தால் ஆறாத புண்ணும் ஆறும். தினசரி காலையில் முன்னர் வைத்தயிலையை எடுத்து விட்டு புண்ணைச் சுத்தம் செய்து, பதிய இலையை வைத்துக் கட்ட வேண்டும்.

◆சில குழந்தைகளுக்கு மண்டையில் அக்கி தோன்றி பின்பு "மண்டைக் கரப்பான்" போன்று பரவிக் காணப்படும். இதற்கு பப்பாளி மரத்துப் பால் மிகவும் பயன்படக்கூடியது. இதற்கு பரிகாரம் சீனாக்காரத் துண்டை நன்றாக எரியும் தணலில் போட வேண்டும். அது முதலில் தண்ணீர்போல் உருகி ஓடும். பிறகு இறுகி நெற் பொரி போல பொரியும். இந்தப் பொரியை பட்டுப் போல தூள் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பப்பாளி மரத்தின் எந்தப் பகுதியைக் கீறினாலும் அந்த இடத்தில் பால் வரும். பிஞ்சுக் காயை நடுவில் நறுக்கினாலும் பால் வரும். இந்தப் பாலை சேகரித்து ஒரு கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, இந்தத் தூளையும் சேர்த்துக் குழைத்தால் வெண்ணெய் போல வரும். இதை மண்டைக்கரப்பான் மேல் தடவி மறுநாள் கிருமி நாசினி கோப்பைக் கொண்டு சுத்தம் செய்து மறுபடி இதே மருந்தைப் போட படிப்படியாக புண்கள் ஆறிவிடும்.

◆ பப்பாளி மரத்திலுள்ள பிஞ்சுக்காயை குறுக்காக நறுக்கி விட்டால் பால்வடியும். அந்தப் பாலை ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் பிடித்து வைத்துக் கொண்டு, ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் இந்தப் பாலை விட்டுக் காய்ச்சினால் பால் சுண்டி உப்பு போல வரும். உடனே சட்டியை இறக்கி அந்த உப்பை ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு காலை, மாலை நெல்லெடையளவு சிறிதளவு வெண்ணெயுடன் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப்புண், அதனால் ஏற்படும் வலி தீரும்.

◆வேனல் கட்டிகள் பருத்துக் காணப்பட் டால் (கோடைகாலத்தில்) இதற்கு வெங்காரத்தை நெருப்பில் போட்டுப் பொரித்து தூள் செய்து வைத்துக் கொண்டு பப்பாளிப்பாலில் போட்டுக் குழைத்து அதன் மேல் தடவி வந்தால் கட்டிகள் பழுத்து உடைந்து ஆறும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
**சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம், கைதடி**

◆பப்பாளிப் பாலை தேங்காய்எண்ணெயுடன் கலந்து தடவ வாய்ப்புண், உதட்டுப் புண் குணமாகும். ■■■

உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி.
என் கண்ணின் பாவை அன்றோ-கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ. -பாரதியார்

வலம்புரி

## நான் கடவுளைக் கண்டேன் குழந்தை வடிவிலே அந்தக் குழந்தையைக் கண்டேன் மரண நிலையிலே

வன்னியில் இடம்பெறும் மனிதப் பேரவலம் இதயத்தைப் பிழிகிறது. இந்தப் பெருந் துயர் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதால் மட்டுமல்ல; இத்தகையதோர் பயங்கரம் யாருக்கு ஏற்பட்டாலும் அது அதிர்ச்சிக்குரியதே.

உயிராபத்து நடக்கும் போது -எங்களைக் காப்பாற்றுங்கள் என மக்கள் ஓலமிடும்போது, இனம், மொழி, சமயம் என்ற வர்க்க பேதங்களைப் பார்ப்பது மனிதப் பிறப்பிற்கே பங்கம் விளைவிக்கும் செயலாகும்.

வன்னியில் - யுத்த களத்தில் சிக்குண்டுள்ள மக்கள் தங்கள் உயிரைப் பாதுகாக்க மன்றாடுகின்றனர்.

இருந்தும் அவர்களை நோக்கி தாக்குதல் இடம்பெற்றவண்ணமுள்ளது.

இந்த மரண பயத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது யார்? இலங்கை அரசு வன்னி யுத்தத்தில் ஒரு முடிவு காண்பதென கங்கணம் கட்டி நிற்கிறது.

யார் எதைக் கூறினாலும் கேட்பதாக இல்லை. உலகில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டிய ஐ.நா. சபை ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் தனது கடமை முடிந்து விட்டதாகக் கருதுகிறது.

அவ்வாறாயின் வன்னியில் தினந்தோறும் மரண பயத்தில் துடிக்கும் மக்களைக் காப்பாற்றுவது யார்?

வன்னி மரண பயங்கரத்தில் குழந்தைகள், சிறுவர்கள் பலியாகும் செய்தி கருவறுத்து மனத்தைக் கரைக்கிறது.

நாம் கடவுளைக் கண்டேன் குழந்தை வடிவிலே; அவன் கருணையைக் கண்டேன் மழலை மொழியிலே என்ற கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள் அர்த்தமற்றவையாகிப் போய்விட்டன.

கடவுளுக்கு இணையான குழந்தைகள் கொல்லப்புடுகின்றனர். அந்தக் கருணை வடிவங்கள் குருதி தோய்ந்த உடம்பினராய் மீளா உறக்கம் கொள்கின்றன.

எங்கே மனித நேயம். எங்கள் சிறுவர் உரிமை அமைப்புகள் யாருமே வரமாட்டார்களா?

ஓ..! உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பதால் அந்த அமைப்புகள் எல்லாம் பலம் பொருந்திய பக்கத்தில் நிற்பது நல்லதென எண்ணி விட்டனவா ஓ...! இறைவா ! நீயும் பெரும்பான்மையின் பக்கம் தான். இல்லையென்றால் சிறுபான்மை மக்களைப் படைத்திருக்க மாட்டாயல்லவா?

# ஆன்மீக விஞ்ஞானி பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் 53ஆவது ஜன்மதினம் இன்று



ஆன்மீக குருவான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்குருஜி புராதன ஞானம், எளிமை , அழகு , அருள் ஆகியவற்றை ஒன்றிணைக்கிறார். அவருடைய தத்துவ மொழிகள் சாதி, மத, கலாசாரத்தடைகள் மற்றும் நாட்டின் எல்லைகளை கடந்து செல்கிறது. மக்கள் ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக புரிந்துகொள்ள அவர்கள் தரத்தை உயர்த்த இவ்வுலகம் முழுவதிலும் இலட்சக்கணக்கானோர் வாழ்வில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வர இவர் காரணமாக இருந்து வருகின்றார்.

தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் கும்பகோணத்திற்கு அருகில் பாபநாசம் என்ற ஊரில் புகழும் சிறப்பும் மிக்க குடும்பத்தில் 1956 ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் பிறந்தார். நான்கு வயதிலேயே அவருடைய ஆசிரியர்கள் , பெற்றோர்கள் எல்லோரும் திகைப்படையும் வகையில் பகவத் கீதையை மனப்பாடமாகச் சொல்லுவார்.

பதினாறு வயதில் இவர் நவீன அறிவியல் மற்றும் புராதன வேதம் பற்றிய படிப்பை முடித்தார். கடவுளை உன்னிடத்தில் காண்பதே தியானம். கடவுளை உன் அருகில் உள்ளவரிடம் காண்பது சேவை. வாழ்க்கையில் ,தியானம்சேவை இவ் விரண்டும் நமக்கு தேவை என்று ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் கூறுகி றார்.

உங்களை உணருங்கள், அன்பில் மலருங்கள் என்னும் தாரக மந்திரத்தை எல்லோரிடமும் விதைத்து வருபவர். நம்மிடம்இருக்கும் ஆற்றலை நம்மை வைத்தே வெளிக் கொணருபவர் அன்பும் களங்கமு மற்ற தன்மையும் உயர்ந்த அறிவாற்றலும் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கராக இம் மண்ணில் தோன்றி மனித குலத்தின் மகத்துவத்தை உலகெங்கும் பறை சாற்றி வருகின்றார்.

நம் மூச்சின் அறிவியல் ரீதியான இரகசியங்களை உலகிற்கு உணர்த்தியுள்ள ஆன்மீக விஞ்ஞானி பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் வாழும் கலை நிறுவனம், வியக்தி விகாஸ்கேந்திர மற்றும் வேத விக்யான் மகா வித்யா பீடம் என் னும் வேதபாடசாலை ஆகியவற்றின் மூலமாக ஆன்மீக வாழ் விற்கு வழிவகுத்துள்ளார்.

மக்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த தியானத்துக்கும் மேலாக ஏதோ ஒன்று தேவை என அவர் உணர்ந்தார். 1982ஆம் ஆண்டின் ஆ ரம்ப ப் பகுதிகளில் இருபத்தியோராவது வயதில் பத்து நாட்கள் மௌனத்துடன் கூடிய தியானத்தில் ஸ்ரீமோகா (கர்நாடக மாநிலம்) என்னும் இடத்தில் இருந்த போது அவர் உள்ளிருந்து சுதர்சன கிரியா எனும் அரிய பொக்கிஷம் மலர்ந்தது.

இ.தயாபரன்

ஜெய் குருதேவ்

# தமிழ் மக்கள் அவலத்தில் சிக்கியுள்ளமைக்கு இந்தியாவின் துரோகத்தனமே காரணமாகும்

## இடது சாரி முன்னணி தலைவர் விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் துரோகத்தனம் காரணமாகவே இலங்கையில் தமிழ் மக்கள் அவலத்தில் சிக்கியுள்ளனர். இம் மக்களது இழப்புகள் அனைத்திற்கும் இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும் பெரும்பான்மை இன கட்சிகளோடு இணைந்த இடதுசாரிகளும் சிறுபான்மை இன கட்சிகளும் மக்களுக்கு எதுவிதமான சேவைகளும் செய்ததில்லையென்பதே வரலாறாகும் என்று இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பு புறக்கோட்டை பழைய நகரசபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரசியல் கூட்டத்தில் உ ரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

நாட்டில் இன்று அடக்கு முறை கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளது. கடுமையான யுத்தத்தால் வன்னி பகுதியில் சிறிய பிரதேசத்திற்குள் பெரும்பாலான மக்கள் சிக்கியுள்ளனர். இம் மக்களுக்கு என்ன நடந்தாலும் கவலையில்லை.யுத்தத்தை முடிக்க வேண்டும் என்று கொடூரத் தன்மையில் அரசாங்கம் படை நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.

தமிழர் சங்காரத்திற்கான அனைத்து உதவிகளையும் இந்தியாவே வழங்கி வருகின்றது. இதற்கு பக்க பலமாக அமெரிக்காவும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவிகளை வழங்கி வருகின்றது.

ஆனால் வெறுமனே இங்கு வந்து தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என இரு நாட்டுப் பிரதி நிதிகளும் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர் இது தான் உண்மை. எமது முன்னணி நெருக்கடிக்குள் சிக்கியுள்ள மக்களுக்காகவே குரல் கொடுக்கின்றது. விசாலமான சிங்கள சமூகத்திற்குள் தமிழ் சமூகம் சிக்கிக்கொண்டுள்ளது. அத் தமிழ் சமுகத்திற்குள்ளும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள சமுகத்தை முனுசாமி பிர நிதித்துவப்படுத்துகிறார்.

எனவே மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை அவருக்கும் வழங்கினோம். ஆனால் தமிழ் மக்களின் பெரும்பாலானோர் பெரும்பான்மை இனக்கட்சிகளின் இணைந்து போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளனர்.

இதனால் எமக்கு என்ன நன்மை கிடைக்கப் போகின்றது.? யானைக்கு வாக்களித்தோம் என்ன நடந்தது அடுத்த கணமே வன்னி மீது கனரக ஆயுதத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தனர்.

பெரும்பான்மை இன அரசியல் கட்சிகளோடு இணைந்து தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ் கட்சிகள் தம்மை சார்ந்த மக்களுக்கு என்ன உரிமைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளனர் எதுவும் இல்லை.

தாம் இணைந்து கொண்ட பெரும்பான்மை இனக்கட்சி தமது இனத்திற்கு எதிராக செயற்பட்டாலும் மௌனிகளாகவே இருக்கின்றார்கள். இதுதான் உண்மை. தமிழ் மக்களுக்காக வீதியில் இறங்கி போராடும் எமக்கு மேல் மாகாண சபையில் ஒருவரேனும் தெரிவாகியிருந்தால் அது அப்போராட்டத்திற்கு மேலும் உந்துசக்தியாக அமைந்திருக்கும் என்றார். (ஓ-6)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விரைவில் மீள் குடியேற்றம்

## ஜனாதிபதி கிறிஸ்தவ மத குருமாரிடம் உறுதிமொழி



(கொழும்பு)

அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதியில் விரைவில் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப் படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிறிஸ்தவ மதகுருமாரிடம் உறுதி மொழி வழங்கியுள்ளார்.


மீள் குடியேற்ற நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக் கப்படவிருக்கும் அதே நேரம் இடம்பெயர்ந்திருக்கும் ஆயிரக் கணக்கான மக்களை தங்க வைப்பதற்கு யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களில் மேலும் 3 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்படும் என ஜனாதிபதி கூறினார்.

கொழும்பு மறை மாவட்ட ஆயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் அடிகளார் உட்பட பல்வேறு கிறிஸ்தவ மத குருமாரை அலரி மாளிகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்த போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழிகளை வழங்கினார்.

மன்னாரில் இடம்பெயர்ந்த 210 குடும்பங்கள் அண்மையில் மீள் குடியமர்த்தப்பட்டதாகவும் ஏனையவர்கள் மிக விரைவில் மீள் குடியமர்த்தப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## தன்னடக்கம்



இரகசியமாகப் பிறரைக் குறை கூறுவது பாவம் என்றறிவாய். அதை முழுவதும் நீ நீக்க வேண்டும். மனத்தில் பலநினைவுகள் எழலாம். ஆனால் அவற்றை வெளியிட முயன்றால் அத மெல்ல மெல்லத் தினையளவைப் பனையளவாக்கும். மன்னித்து மறப்பாயானால் எல்லாம் முடிந்து விடும்.


வீண்வாதம் புரிய யாராவது உன்னிடம் வந்தால் மரியாதையாக உன்னை விலக்கிக்கொள்.எல்லா நெறியிடமும் உனது அனுதாபத்தை வெளியிட வேண்டும். இந்த அடிப்படைக் குணங்கள் உன்னிடம் வெளித்தோன்றும் போது தான் பேராற்றலோ உழைக்கும் திறமை உனக்கு உண்டாகும்.

குழந்தையின் கபடம் அற்ற தன்மையோடு ஆழ்ந்த யோசனையையும் இணைத்துக் கொள் அனைவருடனும் ஒத்துவாழ் ஆணவத்தை முழுவதும் ஒழித்து விடு. ஒரு பக்கச்சார்பான கருத்துகளுக்கு இடம் கொடுக்காதே பயனற்றவாதப் போர் பெரும் பாவத்தையே தரும்.

# ராஜபக்ஷ -சோனியா -கருணாநிதி இவர்களின் சதித் திட்டமே இலங்கையில் தொடரும் பயங்கரத் தாக்குதல்

## ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ தெரிவிப்பு

(சென்னை)



ஈழத்தமிழர் இனத்தை முற்றாகக் கொன்றொழிக்க ராஜபக்ஷ சோனியாகாந்தி- கருணாநிதிபோட்ட ரகசிய சதித்திட்டத்தின் விளைவே தொடரும் மரண பயங்கர தாக்குதலாகும் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார். இலங்கை பிரச்சினை தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் "இலங்கைக்கு இந்தியா ஆயுதம் கொடுக்கவில்லை என்றும் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி உள்ளோம் என்றும் பிரதமர் மன்மோகன்சிங் சென்னை கூட்டத்தில் கூறியுள்ளார். இது வடிகட்டிய பொய்யாகும்.

நேற்று முன்தினம் சென்னையில் பேசிய சோனியா காந்தியும் இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டதற்கு இந்திய அரசின் முயற்சியே காரணம் என்று கூறியுள்ளார் பொய் பேசுவதில் கோயபல்சையும் மிஞ்சி விட்டார் சோனியா காந்தி.

கடந்த 2 நாட்களில் மட்டும் 3 ஆயிரம் அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டு 5 ஆயிரம் பேர் மரணக் காயத்துக்கு உள்ளாக்கப்பட்டு மூன்றரை இலட்சம் தமிழர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கி பரிதவித்துகொண்டுள்ள நிலையில் தமிழர்களை ஏமாளிகள் என்று நினைத்து பேசியுள்ளனர்.

இன்னும் நான்கைந்து நாட்களில் தமது அதிகாரம் முடிவுக்கு வரப்போவதை உணர்ந்து கொண்ட சோனியா காந்தி அடுத்த ஐந்து தினங்களில் ஈழத் தமிழ் இனத்தையே பூண்டோடு ஒழித்திட ராஜபக்ஷவுடன் சேர்ந்து வகுத்த சதித்திட்டம்தான் இத் தாக்குதல்களாகும்.

தமிழன் மானம் இழந்துவிடவில்லை சொரணை செத்துவிடவில்லை என்பதை நிரூபிக்கின்ற வகையில் சென்னைக்கு வந்த சோனியா காந்திக்கு தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ நெடுமாறன் இயக்குனர் பாரதிராஜா தலைமையிலான குழுவினர் கறுப்புக் கொடி ஏந்தி கண்டனம் தெரிவித்தனர்.

அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து சிறையில் பூட்டியுள்ள அரசின் செயலை வன்மையாக கண்டிக்கிறேன்.

வரலாற்றில் மன்னிக்க முடியாத துரோகத்துக்கு உடந்தையாக இருந்தவர் கருணாநிதி என்ற அவப்பெயரை சுமந்து நிற்கிறார்.

ஈழத் தமிழர் இனத்தை முற்றாகக் கொன்று ஒழிக்க ராஜபக்ஷ, சோனியா காந்தி, கருணாநிதி போட்ட இரகசிய சதித்திட்டத்தின் விளைவுதான் தொடரும் மரண பயங்கரத் தாக்குதல்களாகும் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பாரதிராஜா, பழ. நெடுமாறன் உட்பட 180 பேர் பிணையில் விடுதலை

(சென்னை)

சென்னையில் தி.மு.க. கூட்டணி தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்த சோனியாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தமை குறித்து இயக்குநர் பாரதிராஜா, பழநெடுமாறன் உட்பட 67 பேரும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் 113 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்யக் கோரி மனுச் செய்ததையடுத்து நீதிவான் விசாரணை செய்து இயக்குநர் பாரதிராஜா உட்பட 180 பேரையும் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார். (ஓ-6)

# இந்தியாவின் தவறான வெளியுறவு கொள்கையால் தமிழர்கள் கொல்லப்படுவதை தடுக்க முடியவில்லை

## வெங்கையா நாயுடு குற்றச்சாட்டு

(சென்னை)

இந்தியாவின் தவறான வெளியுறவு கொள்கையால் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை தடுக்க முடியவில்லை என்று வெங்கையாநாயுடு கூறியுள்ளார்.


வடசென்னை தொகுதியில் பா.ஜ.க.வேட்பாளர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு வாக்களிக்கக்கோரி பா.ஜ.க.வினர் சைக்கிளில் பேரணியாக சென்று நேற்று முன்தினம் வாக்கு கேட்டனர்.

சைக்கிள் பிரசாரத்தை தொடங்கிவைத்து பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கையா நாயுடு பேசுகையில்,

இந்தியாவின் வெளியுறவு கொள்கை சரியில்லை தவறான வெளியுறவு கொள்கையால்தான் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை தடுக்க முடியவில்லை. இந்த சூழ்நிலையில் நாட்டை சீர் திருத்த அத்வானி பிரதமராக வந்ததால்தான் முடியும் பா.ஜ.க.வால் தான் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என்றார். (ஓ-6)

# சிறுபான்மை மக்களுக்காக இன்னொரு நாட்டிற்குள் தலையிடலாம் என ஐ.நா .சட்டம் வழிவகுத்துள்ளது

## ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

சிறுபான்மை மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினால், படுகொலை செய்தால் ஏனைய நாடுகள் தலையிடலாம். தேவைப்பட்டால் இராணுவத்தை அனுப்பலாம் என்று 8 ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய நாடுகள் அவை சட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. என பா.ம.க நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அதில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது,

1971 ஆம் ஆண்டு வங்கதேசத்துக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி இந்திராகாந்தி விடுதலை பெற்றுக் கொடுத்தார். பாகிஸ்தானுக்குள் இந்திய இராணுவத்தை அனுப்பும் போது பாகிஸ்தான் நிர்வாகத்தால் வங்க மக்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள்அதை தடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

அப்போது பன்னாட்டு சட்டம் குறுக்கிடவில்லை. அதை விட இப்போது இலங்கையில் நிலைமை மோசமாகவுள்ளது

இந்த சட்டத்தின் படி கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற அடக்கு முறைக்கு எதிராகவும் இனவெறிக்கு எதிராகவும் மத வெறிக்கு எதிராகவும் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகளின் படையினர் படையெடுத்துச் சென்று பொஸ்னியா போன்ற பல புதிய நாடுகள் உருவாகியிருக்கின்றன. அப்போதெல்லாம் சர்வதேச சட்டங்கள் குறுக்கிடவில்லை.

ஈராக்கிற்கு ஆப்கானிஸ்தானிற்கு, அமெரிக்க படைகள் அனுப்பப்பட்டது எப்படி? இலங்கைக்கு இராணுவத்தைஅனுப்பி தனி ஈழத்தை அமைப்பது சாத்தியமானதுதான். கருணாநிதி சொல்வார் செய்யமாட்டார். ஜெயலலிதா சொல்வார் அதையே செய்து முடிப்பார் என்றார். (ஓ-6)

# தொடுகை உணர்வுள்ள செயற்கை தோலைக் கொண்ட ரோபோ

## உருவாக்கும் முயற்சியில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் மும்முரம்



மனித சருமத்தை அச்சு அசலாக ஒத்த செயற்கைத் தோலைக் கொண்ட ரோபோவை உருவாக்கும் முயற்சியில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஐரோப்பிய கணனி விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கெர்ஸ்டின் டோடென் ஹன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவினரே மேற்படி ரோபோ தோலை உருவாக்கும் 3 வருட கால ஆராய்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடுகை உணர்வுகளைப் பிரதிபலிக்கும் நுண்உணர்கருவிகள் இணைக்கப்பட்ட இந்த ரோபோ தோலானது மனிதனையொத்த உணர்வு வெளிப்பாடுகளை ரோபோ வெளிப்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மற்றவர்களுடன் பழகுவதற்குத் தயங்கும் சிறுவர்களுடைய மனோபாவத்தில் மாறுதலை ஏற்படுத்த உதவக்கூடிய ரோபோவை வடிவமைப்பதே தமது இலக்கென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் ஹஸ்பர் என அழைக்கப்படும் குழந்தை வடிவான ரோபோவைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சியை முன்னெடுத்துள்ளனர். (ஓ-6)

# வெள்ளை மாளிகை முன்பாக தமிழர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(வோஷிங்டன்)

இலங்கை விடயத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தலையிட்டு உடனடியான யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் 150 இற்கும் அதிகமான தமிழர்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் 300 பேர் வரை கலந்து கொள்வார்கள் என தாம் எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஒபாமா தமிழர்களை காப்பாற்றுங்கள் ஆம் உங்களால் முடியும் ஆகிய வாசகங்கள் அடங்கிய புதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தி நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# 5 மாத பிரிவின் பின் மீள இணைந்துள்ள ஜோடி

(லண்டன்)

பிரித்தானியா இளவரசர் வில்லியம் 5



மாத பிரிவுக்குப் பின் தனது காதலி கேட் மிடில்டனுடன் மீளவும் இணைந்துள்ளார்.

கடந்த ஜனவரி மாத ஆரம்பத்திற்கு பின் வில்லியமும் கேட்மிடில்டனும் ஒன்றாக இணைந்து காணப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

26 வயதான வில்லியம் பிரித்தானிய அரச விமானப்படையில் உலங்குவானூர்தி விமானியாக பயிற்சி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இளவரசர் வில்லியத்துக்கும் கேட்மிடில்டனுக்குமிடையிலான காதல் முறிவடைந்து விட்டதாக அண்மைக் காலமாக பரவலாக பேசப்பட்ட நிலையில் ஞாயிற்றுக்கிழமை போலோ விளையாட்டு மைதானமொன்றில் மிக நெருக்கமாக அந்த ஜோடி காணப்பட்டமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

கேட் மிடில்டன் (27வயது) அவரது சகோதரி பிப்பா (25வயது) ஆகியோர் இளவரசர் வில்லியமும் அவரது சகோதரரான இளவரசர் ஹரியும் (24வயது)விளையாடுவதை கண்டு களித்தனர்.

பின்னர் இளவரசர் வில்லியமும் கேட் மிடில்டனும் காரில் ஏறி இளவரசரின் தனிப்பட்ட வசிப்பிடமான சென்.ஜேம்ஸ் மாளிகைக்கு சென்றனர். (ஓ-6)

# அமெரிக்காவின் அட்லாண்டிஸ் ஓடம் விண்வெளிக்கு புறப்பட்டது

(புளோரிடா)

அமெரிக்கா அனுப்பி ஹப்பிள் என்ற டெலஸ்கோப் விண்வெளியில் சுற்றி படம் எடுத்து அனுப்பி வருகிறது. இதில் கோளாறு ஏற்பட்டது. இதை சரி செய்வதற்காக விண்வெளி ஓடம் மூலம் வீரர்களை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்தது.

இதற்காக 7 வீரர்கள் தயார்ப்படுத்தப் பட்டனர். அவர்கள் அட்லாண்டிஸ் விண்வெளி ஓடம் மூலம் நேற்று புறப்பட்டுச் சென்றனர். புளோரிடா விண்வெளி மையத்தில் இருந்து விண்வெளி ஓடம் புறப்பட்டது.அதை முதுகில் சுமந்தபடி ரொக்கெட் விண்ணில் பாய்ந்தது.

விண்வெளி வீரர்கள் 5 தடவை விண் வெளியில் நடந்து டெலஸ்கோப் பழுதை சரிசெய்கின்றனர்.

இதனால் டெலஸ்கோப் மேலும் 6 இல் இருந்து 8 ஆண்டுகள் வரை செயற்படும்.



இது ஒரு ஆபத்தான பயணமாக கருதப்படுகின்றது. அட்லான்டிஸ் விண்வெளி ஓடம் சர்வதேச விண்வெளி மையத்திற்கு செல்லும் திட்டம் எதுவும் இல்லை. ஒரு வேளை அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் மற்றொரு ஓடத்தை அனுப்பி மீட்டுவரவும் தயாராக வைத்துள்ளனர். (ஓ-6)

# விஸ்வரூபமெடுத்தார் ரெய்லர் பெங்களூர் அணி அதிரடி வெற்றி

## மக்குலம் அரைச்சதம் வீண்

(சென்சூரியன்)

ரோஸ் ரெய்லரின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை



வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று சென்சூரியனில் நடைபெற்ற லீக் சுற்றின் 41ஆவது போட்டியில் மக்குலம் தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மக்குலமின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்ளையிழந்து 173 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் பிரண்டன் மக்குலம் ஆட்டமிழக்காமல் 64 பந்துகளில் (10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 84 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 27 பந்துகளில் (3 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வினேய் குமார் 2 விக்கெட்டுக்களையும்அணித் தலைவர் கும்ளே, அகில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 174 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரைடர்-கலிஸ் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி 8.2 ஓவர்களில் 58 ஓட்டங்களை எடுத்த போது கலிஸ் 34 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

அடுத்து ரைடர் 22 ஓட்டங்களுடனும் உத்தப்பா 7 ஓட்டங்களுடனும் ராகுல் ராவிட் 12 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 15.4 ஓவர்களில் 122 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய ரோஸ் ரெய்லரின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 176 ஓட்டங்களைக் குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ரோஸ் ரெய்லர் 33 பந்துகளில் (7 பவுண்டரிகள்,5 சிக்ஸர்கள் அடங்கலாக) 81 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் 13 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளி கார்த்திக் 2 விக்கெட்டுக்களையும் அஜந்த மென்டிஸ், அஜித் அகாகர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.'

இப்போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த ரோஸ் ரெய்லர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல்சலஞ்ஜர்ஸ்அணிதான் விளையாடிய 11ஆவது போட் டியில் பெற்ற 5ஆவது வெற்றி இது வாகும்.

இதேவேளை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 11ஆவது போட்டியில் 9ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# பிரவோ பிரகாசம் மும்பை அசத்தல்

## யுவராஜ் அணி சோகம்

(சென்சூரியன்)



பிரவோவின் அதிவேக அரைச்சதத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். இருபது-20 தொடரில் நேற்று சென்சூரியனில் நடைபெற்ற லீக் சுற்றின் 42 ஆவது போட்டியில் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி முன்னணித்துடுப் பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக் கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சொகால் 23 பந்துகளில் (5 பவுண்டரிகள்,3 சிக்ஸர்கள் அடங்கலாக) 43 ஓட்டங்களையும் கோல் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்ளையும் அணித்தலைவர் யுவராஜ் சிங் 12 ஓட்டங்களையும் எடுத்ததுடன் ஹட்டிச், இர்பான் பதான் ஆகியோர் பூச்சியத்துடனும் சங்கக்கார 8, மோட்ரா 4, பேர்மேர்ஸ் பஷ் 5 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஆட்டம் இழந்து ஏமாற்றினர்.

பந்து வீச்சல் டுமினி 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, குல்கர்னி, ஹர்பஜன் சிங் மற்றும் நகானி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 120 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி பிரவோவின் அதிவேக அரைச்சதத்தின் மூலம் 16.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 122 ஓட்டங்களை குவித்து 8 விக்கெட்டுக்கள்வித்தியாசத்தில்வெற்றிபெற்றது.

இதில் பிரவோ 53 பந்துகளில் (7 பவுண்டரிகள்,3 சிக்ஸர்கள் அடங்கலாக) 70 ஓட்டங்களையும் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 29 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்க லாக) 41 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் எடுத்து 3ஆவது விக் கெட்டுக்காக 63 பந்துகளில் 82 ஓட்டங்களை இணைப்பாட்டமாக குவித்தனர்.

பந்துவீச்சில் பிரெட் லீ, சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப் போட்டியில் மும்பை இந்தி. யன்ஸ் அணியின் ஹர்பஜன் சிங் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ்அணிதான்விளையாடிய 11ஆவது போட்டியில் 5ஆவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணி தான் விளையாடிய 11 ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியை சந்தித்தது.


# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் நடேஸ்வராக் கல்லூரி லிகிதரும்,

முன்னாள் உப தலைவர் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்

## அமரர் திரு.பாலாத்தை வைத்திலிங்கம்

(பெரியப்பா, அப்பப்பா)

மண்ணில் 03.10.1932

விண்ணில் 08.05.2009

எங்கள் குடும்ப பாசத்தின் பெரியப்பா-அப்பப்பா
காலத்தால் மறக்க முடியாத பெரியப்பா-அப்பப்பா
பாசத்தால் எம்மைக் கட்டிவைத்த பெரியப்பா-அப்பப்பா
ஆறுதல் கூறி எம்மை வழி காட்டிய பெரியப்பா-அப்பப்பா
கல்வியே செல்வம் என்று அறிவூட்டிய பெரியப்பா-அப்பப்பா
தேன் சுவைக்கும் கதைகள் சொல்லி கவலை மறக்கச் செய்த பெரியப்பா-அப்பப்பா
சேவையே கடமை என்று உழைத்தாய் பெரியப்பா-அப்பப்பா
நடேஸ்வராக் கல்லூரி உங்கள் நாமம் கூறி நிமிர்ந்து நிற்கிறது பெரியப்பா-அப்பப்பா
சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம் புத்திஜீவியென புகழாரம் சூட்டி வாழ்த்துகிறது பெரியப்பா-அப்பப்பா
எம்மூராம் ஏழாலை ஆலயங்களைச் சிறப்பித்து சேவைகள் செய்தீர் பெரியப்பா-அப்பப்பா

குறிப்பு: அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.05.2009 புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்,

செ.சிவலிங்கம் குடும்பம் வ.பத்மநாதன் குடும்பம்

(C-2466)

# சர்வதேசத்தின் சவால்களுக்கு...

சர்வதேச கவனத்தை ஈர்த்து இலங்கையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஐ.நா. வுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்.

அதற்காகவே புலிகள் சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு பழியை படையினர் மீது போடுகின்றனர். அரசாங்கத்தால் அறி விக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் படையி னர் நடத்திய ஷெல் தாக்குதலில் ஆயிரம் சிவிலியன்கள் பலியானதாகவும் ஆயிரத்து 600க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக வும் புலிகள் சார்பு இணையத்தளமான தமிழ் நெற் வெளியிட்ட பொய்த் தகவலை சர்வதேச முன்னணி ஊடகங்கள் உண்மை நிலையை ஆராய்ந்து பார்க்காமல் வெளியிட்டமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அவ்வாறானதொரு தாக்குதலை படையி னர் அப்பாவிச் சிவிலியன்கள் மீது மேற் கொள்ளவில்லை என்பதை அரசின் சார்பில் மிகவும் உறுதிபடக் கூறுகிறேன்.

டாக்டர் சத்தியமூர்த்தி என்பவரே இந்தத் தகவலை வழங்கியதாக அறிவிக்கப்பட்டது. எனினும் அந்தப் பெயரில் சுகாதார அமைச் சில் எந்தவொரு நபரும் பதியப்படவில்லை.

புலிகளைக் காப்பாற்ற சர்வதேச ரீதியில் பலவகையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அதன் முக்கிய பங்காள ராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க செயற்படுகிறார்.

அவர் நோர்வேக்கும் ஐரோப்பிய நாடுக ளுக்குமான சுற்றுப்பயணம் ஒன்றை ஆரம் பித்துள்ளார். இலங்கையில் மனித உரிமை கள் மீறப்படுவதாகவும் அதற்கான விளக்கம் இலங்கையிடம் கோரப்படவேண்டும் என்றும் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளவே அவரது இந்த விஜயத்தின் நோக் கமாகும். கடந்த 48 மணிநேரத்தில் புலிகளின் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி சர்வதேச ஊடகங் கள் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

எனினும் சர்வதேச ரீதியில் புலிகளால், தோற்றுவிக்கப்படும் எந்தச் சவாலுக்கும் முகம் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் உதய நாணயக்கார கூறியதாவது, 59-வது படையினர் மட்டுவாகல், நந்திக்கடல் வழியாக தமது பலத்தை ஸ்திரப்படுத்தி முன் னேறி வருகின்றனர்.

இப்பகுதியில் 3 தற்கொலைத் தாக்குதல் கள் நடத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் படையினர் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது, பல ஆயுதங்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் 10 சடலங்கள் கைப்பற்றப்பட்டன. இதுவரை ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 500 பொதுமக்கள் வரை படையினரால் மீட்கப்பட்டுள்ளனர் என்றார்.

கடற்படைப் பேச்சாளர் பேசுகையில், படகு களில் தப்பி வந்த சிவிலியன்கள் வரும் கடற் படையினரின் தாக்குதலில் கொல்லப்படவில் லை. 20ஆயிரத்துக்கும் அதிகமான மக்க ளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இதுவரையில் கடற்புலிகள் 7 தடவைகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி வந் துள்ளனர். கடற்படையினர் ரோறர் படகுக ளின் உதவியுடன் முல்லைத்தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் 17 படகுகளை தாக்கி யழித்தும் சில படகுகளை கைப்பற்றியும் உள் ளனர். அதேவேளை 100க்கும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றார். (ச-5,14)

# முள்ளிவாய்க்...

எதுடன் 86 பேர் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதலில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் சபையின் நிர்வாக உத்தியோ கத்தர் தர்மகுலசிங்கம், மருத்துவமனையில் பணியாற்றிய இரண்டு தொண்டர்கள் ஆகி யோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று முல் லைத்தீவு மாவட்ட மருத்துவ அதிகாரி வீரகத்தி சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 2ஆம் திகதி முள்ளிவாய்க் கால் மருத்துவமனை மீது நடத்திய அகோர எறிகணைத் தாக்குதல்களில் நோயாளர்கள் உட்பட 64 பேர் படுகொலை செய்யப்பட்டு டன் 87 பேர் காயமடைந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ச-5,14)

# பாதுகாப்பு வலயத்திலுள்ள...

அமைக்கப்பட்டிருக்கும் முகாம்களை நடத்து மாறும் அவற்றை கண்காணிக்குமாறும் கோருகிறோம் என விடுதலைப் புலிகள் சர்வ தேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ள னர். இது தொடர்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று முன்தினம் திங்கட்கிழ மை வெளியிட்ட அறிக்கை என தெரிவித்து இணையத்தளங்களில் வெளியான செய்தி வருமாறு,

அரசாங்கமானது தன்னுடைய போரை தற்போது முழு அளவில் பல முனைகளில் முன்னெடுத்து வருகின்றது. தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து அந்தத் தாயகத்தை இல்லாமல் செய்வதில் இருந்து தமிழ் மக்கள் மீதும் மருத்துவமனைகள் மீதும் பல்குழல் எறிகணை மற்றும் கனரக எறிகணைத் தாக் குதல்களை நடத்துவதன் மூலம் கல்வி மற் றும் வாழ்வாதாரங்களின்றி தமிழர்களை பல வீனப்படுத்துவது மற்றும் தடுப்புக்காவல் முகாம்களில் உள்ளவர்களை பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகளை அரசு தீவிரப் படுத்தியிருக்கும் அதேவேளையில் அனைத் துலக சமூகம் பெரும்பாலும் மௌனமாகவே இருக்கின்றது.

தெரிவு செய்யப்பட்ட சில முகாம்கள் மட் டும் அனைத்துலக சமூகங்களின் அதிகா ரிகளுக்கும் ஊடகங்களுக்கும் காண்பிக்கப படுகின்றது. மிகவும் மோசமான நிலையில் உள்ள ஏனைய முகாம்கள் உலகத்தின் கண்களில் இருந்தும் காதுகளில் இருந்தும் மறைக்கப்படுகின்றன.

இதனை விட இடம்பெயர்ந்தவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தடுத்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. வவு னியாவை விட இந்த பகுதிகளில் தடுத்து வைக்கப்படுபவர்களை பார்வையிடுவது ஊட கவியலாளர்களுக்கு மிகவும் சிரமமானதா கும் என்றுள்ளது. (ஏ-1)

# உணவுப் பொருள்...

எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் மரநிழல்க ளில் வசித்து வருகிறார்கள். இத்துடன் ஷெல்கள் விழும்போது இடங்களை மாற்றிமாற்றி இருக்கிறார் கள். கிட்டத்தட்ட 400 முதல் 500 மெற்றிக் தொன் உணவு இங்கு உள்ளவர்களிற்கு ஒரு வாரத்திற்கு தேவைப்படுகிறது.

ஆனால் 60 மெற்றிக்தொன் வரையான உணவுப் பொருட்களே வருகின்றது. அதில் அரிசி, எண்ணெய், சீனி போன்றனவே காணப்படுகின்றன.

மரக்கறி வகைகளோ, சிறுவர்களிற்கான பால்மா வகைகள் மற்றும் உணவு, திரிபோசா என எதுவுமே வருவதில்லை. மிகவும் பசியுடனேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் இருக்கின்ற இடங்களிற்கு மக்கள் வந்து தமக்கு உணவு தருமாறும் அரிசி, மா என்பன தரு மாறும் கேட்டுக் கெஞ்சுகிறார்கள். நான் நினைக்கி றேன். சில வேளைகளில் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவை மட்டுமே உண்ணக் கூடியதாக இருக்கிறது.

தேநீர் கூட குடிக்க முடியாத நிலை காணப் படுகிறது. மக்கள் மிகவும் அல்லற்படுகிறார்கள். அவர் கள் உணவிற்காக படுகின்ற வேதனை வார்த்தை களால் வர்ணிக்கவே முடியாது என்று அவர் தெரிவித் துள்ளார். (ச-14)

# வன்னி மக்களின்...

முடியாதெனவும் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

இலங்கை விடயத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப் பது குறித்துப் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் டேவிட் மிலி பாண்ட், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குஷ்னர் மற்றும் ஒஸ்ரியாவின் வெளிவிவகார மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான அமைச்சர் மைக்கல் ஸ்மின்லெகர் ஆகியோர் தமது எதிர்ப்பை தெரிவித் துள்ளனர்.

அங்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்து நாங்கள் அதிர்ச்சியடைந்தோம். மக்கள் படும் கஷ்டங்கள் மற்றும் அவர்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு நாம் ஆதரவு வழங்க முடியாது என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் குஷ்னர் ஊடகவியலாளரிடம் கூறினார். அதே நேரம் இலங்கை விடயம் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட வேண்டு மென்ற கோரிக்கைக்கு சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. (எ-5,14)

# புலிகளின்...

முற்றாக நிறுத்தி அவர்களை வலுவிழக்க செய்து விட முடியும் என இந்திய தூர்தர்ஷன் தொலைகாட்சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் பாதுகாப்பு செயலர் தெரிவித் துள்ளார். அத்துடன் தற்போது முன்னெடுக்க தீர்மா னித்திருக்கும் இராணுவ முன்னெடுப்புக்கள் கடந்த 20ஆம் திகதி மண்திட்டுக்களை தகர்த்து பொதுமக் களை மீட்ட நடவடிக்கையை ஒத்ததாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கிடையில் முல்லைத் தீவு நந்திக் கடல் களப்பு பிரதேசத்தை நேற்று தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக இரா ணுவத்தினர் அறிவித்துள்ளனர். (ச-5)

# இளம் குடும்...

மோட்டார் சைக்கிளில் சென்ற இனம் தெரியா தோர் அவரை வெளியே அழைத்து சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது. இவரது சடலம் நேற்றுக் காலை யாழ்.போத னா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ச-7,30)

# வன்னியில் கடந்த 3 மாதங்...

வன்னியில் இடம்பெறும் மனிதப் பேரவ லத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைத் துலக சமூகத்திற்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவே எனத் தெரிவித்திருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இந்தச் சந்தர்ப் பத்தை தவறவிட்டால் மேலும் பாரிய இரத்தக் களரியை சந்திக்க வேண்டிவரும் எனவும் அது தவிர்க்க முடியாது போகலாம் எனவும் கடுமையாக எச்சரித்துள்ளது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை கொ ழும்பு ஜானகி ஹோட்டலில் நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் மாநாட்டிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த எச்சரிக்கை யை வெளியிட்டது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலை வர் இரா.சம்பந்தன் தலைமையில் நடை பெற்ற இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பிரதித் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறீகாந்தா உட்பட கூட்டமைப்பின் 13 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வன்னியில் கடந்த 3 நாட்களில் மாத்திரம் 100 சிறுவர்கள் உட்பட 580 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர் என உறுதிப்படுத்தப் பட்ட தகவல்கள் கிடைத்திருக்கின்றது என இங்கு தெரிவித்த இரா.சம்பந்தன், அரசாங் கத்திற்கு பொதுமக்களைப் பாதுகாக்கவேண் டிய கடமையுள்ளது.

அதேபோல தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கும் பொதுமக்களைப் பாதுகாக்க வேண் டிய கடமையுள்ளது எனவும் வலியுறுத்தினார்.

அத்துடன் வன்னியில் பசியாலும் பொது மக்கள் ஒருபுறம் பலியாகிக்கொண்டிருக்க, படையினர் கனரக ஆயுதங்களைப் பயன் படுத்தி தாக்குதல்களை நடத்துவதாலும் பெரு மளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுக் கொண் டிருக்கின்றார்கள் எனத் தெரிவித்த சம்பந்தன், இந்நிலையில் அரசாங்கம், பாதுகாப்பு வல யத்திற்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் இருக் கிறார்கள் எனக் கூறி, தமிழ் மக்களை இன அழிப்புக்கு உள்ளாக்கி வருவ தாக குற்றம் சாட்டினார்.

குறிப்பாக வன்னியில் கடந்த 3 மாத காலப்பகுதியில் மட்டும் சுமார் 10 ஆயிரம் மக்கள் சிறிலங்காப் படையினரின் கனரக ஆயுதங்க ளின் தாக்குதல்களால் பலியாகியுள் ளனர்.

சுமார் 20 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இங்கு தெரிவித்தனர். கடந்த 27 ஆம் திகதி முதல் பாதுகாப்பு வலயங்களின் மீது கனரக ஆயுதங்களைப் பயன் படுத்துவதில்லை என அரசாங்கம் உறுதியளித்த போதும், தொடர்ந்தும் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி மக்களை கொலை செய்து வருகின் றது என இங்கு உரையாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டி னார்.

இந்தக் கொலைகளுக்கு ஐ.நாவின் சிறிலங்காவுக்கான பிரதிநிதிகளின் தகவல்களும் வன்னியில் தற் போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் தகவல்களும் சாட் சியாக உள்ளது என சுரேஷ் பிரே மச்சந்திரன் சுட்டிக் காட்டினார். (ச-5)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் இரத்தினசபாபதி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு மணிய காரன் வீட்டடியை வாழ்விடமாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இரத்தினசபாபதி அவர்கள் நேற்று இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் பொன் னம்மா தம்பதியினரின் மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கண வரும், இரத்தினேஸ்வரி (கனடா), சிவதாஸ் (சாளினி நகையகம்), ஞானேஸ்வரி (கனடா), மகேஸ்வரி, விமலேஸ்வரி, காலஞ்சென்ற கிருபானந்தவதனி மற்றும் றயனிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரட்ணராஜா (கனடா), இந்திராணி (அதி பர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), பரராஜசிங்கம் (கன டா), சடாச்சரன் (ஜெகன்), கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.05.2009 புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொத்தி யாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெசவாளர் ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில்.

தகவல்:
இ.சிவதாஸ் (மகன்)
ச.சடாச்சரன் (மருமகன்)

(C-24 68)

## தொழிற் பயிற்சிகள்

மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகளில் தொழில்நுட்பத்துறை யில் வேலைவாய்ப்பு பெறுவதற்கும் உள்நாட்டில் சுயமாக வேலைவாய்ப் புப் பெறுவதற்கும் ஏற்ற முறையில் அதிகூடிய நேர செய்முறைப் பயிற் சியளிக்கப்பட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் இயங்கும் முறை; திருத்தப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். *காலம்: 6 மாதம்*

★ றேடியோ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
றேடியோ CD Player Amplitier
ரெலிவிசன் DVD Player Video Deck ஆகியன பயிற்சியளிக்கப்படும். *காலம்: 10 மாதம்*

★ எலக்றிக்கல் வயரிங், றீவைண்டிங், வீட்டு மின்சார வேலை, மின் மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக் கப்படும். *காலம்: 6 மாதம்*

★ Mobile Phone Repairing, Hard ware, Soft ware, Hard ware Repairing, Phone Lock பயிற்சியளிக்கப்படும் *காலம்: 2 மாதம்*

★ Dip. in Computer Hard ware Engineering *காலம்: 3 மாதம்*

புதிய பயிற்சிகள் ஆரம்பம் :15/05/09;16/05/09
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்.

*விபரங்களுக்கு:*

**Jaffna Technical Institute**
NO. :45, Clock Tower Road, Jaffna.
TP. :222 6434, 0718561654, 0779254078

(C-2458)

யாழில் DMI

மாபெரும் கருத்தரங்கு
பொருளியல் (2009 A/L)

வடமராட்சியில் CRISTAL (நெல்லியடி)

22ஆம் திகதிக்கு முன் பதிவுகளை செய்யவும்
8 வெளியீடு விடைகளுடன் வழங்கப்படும்.

PART I - 01 June 09 to 15 Ju 09
PART II - 16 June 09 to 28 Ju 09

BY: S.S.SRI

தொண்டைமானாறு பரீட்சைக்கு அமைய நேர அட்டவணை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(2729)

## இடமாற்றமும் மலிவு விற்பனையும்

நியூ சிற்றி றேடர்ஸ், 319 (A), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான றேடியோக்கள், கசெற் றெக்கோடர்கள், கார் றேடி யோக்கள், வோக்மன், சொனி, பனசொனிக் ரிவி, டெக், சிடி-டிவிடி பிளேயர்கள், டிஸ் அன்ரனா றிசீவர்கள், சாச்சர் லைட், றைஸ் குக்கர், ஹொட் பிளேட், அயன், மின் விசிறிகள், காஸ்குக்கர்கள், கிறைண்டர், மண்ணெண்ணெய் அடுப்புகள் ஆகிய சகல பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

*குறிப்பு: இவ்விடம் கே.கே.எஸ்.வீதியும் ஸ்ரான்லி வீதியும் சந்திக் கும் சந்தியிலிருந்து உட்புறமாக 6-வது கடையாகும்.* (C-24 64)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.